Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 108 பங்குனி 03ஆம் நாள் திங்கட்கிழமை 16 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## குடும்பத்தினரைத் தாக்கி நகைகள், பணம் கொள்ளை

சாவகச்சேரியில் துணிகரம்

சாவகச்சேரி, மார்ச் 16

நடுநிசி வேளையில் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களைத் தாக்கி, தங்கநகைகள் மற்றும் 23

## ஏப்ரல் 25

# திட்டமிட்டவாறு தேர்தல் நடக்கும்

### கோத்தாபய திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 16

திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று சார்க் நாடுகளின் தலைவர்களிடம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சார்க் கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களுடன் செய்மதி காணொலிதொழில் நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடலில் பங்குபற்றி கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார். 'நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளன. மக்கள் 23

## ஓ/எல் பெறுபேறு மாத இறுதியில்

கொழும்பு, மார்ச் 16

2019ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படவுள்ளன என்று 23

*முச்சந்தி முரளி*




*யாழில் மீண்டும்*

## ஒரே தடவையில் 4 குழந்தைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் உடுவிலில் வசிக்கும் ஆசிரியருக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று ஒரே தடவையில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன.

சத்திர சிகிச்சை மூலம் பிறந்த நான்கு குழந்தைகளுமே பெண் குழந்தைகளாகும்.

இந்த மாதம் 2ஆம் திகதியும் கட்டுவனைச் சேர்ந்த பெண்ணுக்கு 4 குழந்தைகள் ஒரே தடவையில் பிறந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,105)

## கொரோனா நோயாளர் எண்ணிக்கை எகிறுகிறது

- நேற்று மட்டும் 8 பேர்
- 133பேர் கண்காணிப்புக்குள்
- 1,719 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

இது வரை **18**

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் கொரோனா வைரஸ் மிக வேகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நேற்று ஒரே நாளில் 08

## அராலியில் விபத்து இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணத்திலிருந்து அராலி நோக்கிப் பயணித்த இளைஞன், அராலிப் பகுதியில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மதகின் அருகிலிருந்த குழி 23

## கட்டுப்பணம், வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படாது

யாழ்ப்பாணம், மார்ச் 16

இன்று அரச விடுமுறை தினம் என்பதால் நாடாளுமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணம் பொறுப்பேற்றல் மற்றும் வேட்பு மனுக்களை பொறுப்பேற்கும் பணிகள் இடம்பெறாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 23

## கொரோனா மையம் வேண்டாம்: மன்னாரில் நேற்றுப் போராட்டம்!

மன்னார், மார்ச் 16

கொரோனா வைரஸ் பரவிய நாடுகளிலிருந்து வந்தவர்களை தனிமைப்படுத்தும் மையங்களை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மாலை மன்னாரில் போராட் 23

## தீயில் எரிந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டி கொண்டவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த கதிரவேலு சிவலிங்கம் (வயது - 66) 21

## அத்தியாவசிய சேவைகள் இன்று இடம்பெறும்

- தேவைப்பட்டால் விடுமுறை நீடிப்புச் செய்யப்படும்
- தனியாருக்கும் விடுமுறை வழங்க அரசு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 16

இன்று விடுமுறை தினமாக இருந்த போதிலும் அத்தியாவசிய சேவைகளான சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம் உள்ளிட்ட பொது மக்களுக்கான சேவைகள் இடம்பெறும் என்று அரச நிர்வாக உள்நாட் 21

பிரிட்டனிலிருந்தான

## விமான சேவை நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 16

பிரிட்டன், நோர்வே, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கான விமான சேவைகள் இன்று முதல் இரண்டு வாரங்களுக்கு தற்காலிகமாக 23

## வடமராட்சிப் பெண் கனடாவில் கொலை



ஒன்டாரியோ, மார்ச் 16

ஒன்டாரியோ மாகாணத்திலுள்ள அஜின் கோட் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த இருவரும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல் லப்பட்டபோதும் ஒருவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

கனேடிய நேரப்படி நேற்றுக் காலை 10 மணிக்கு 21

## இத்தாலியிலிருந்து வந்தோர் தங்கியிருந்த வீட்டில் பதற்றம்!

### பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இத்தாலியில் வசித்து வரும் குடும்பத்தினர் பருத்தித்துறை சுப்பர்மடத்தில் உள்ள தமது உறவினர்கள் வீட்டுக்கு வந்திருந்த நிலையில், பொலிஸாரும் சுகாதார உத்தியோகத்தர்களும் முற்றுகையிட்டு விசாரணையில் ஈடுபட்டதால், அந்தப் பகுதியில் 23

## கோடீஸ்வரனால் கூட்டமைப்புக்குள் குழப்பம்

வவுனியா, மார்ச் 16

அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனுக்கு தமிழ் அரசுக் கட்சி ஆசனம் வழங்கினால் நாம் எதிர்ப்போம். இவ்வாறு முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற 23

## பலாலி விமான நிலையம் இரு வாரங்களுக்கு மூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை நேற்று மாலை அறிவித்துள்ளது.

இலங்கையிலும் கொரோனா தொற்று அச்சுறுத்தல் நிலவும் நிலையில் யாழ். சர்வதேச விமான 23

சாவகச்சேரியில் இருந்து

## கொழும்பு செல்வதற்கு அனுமதி கோரும் சீனர்

சாவகச்சேரி,மார்ச் 16

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரின் கண்காணிப்பில் இருக்கும் சீனப் பிரஜை, அலுவலக விடயமாகக் கொழும்பு செல்ல வேண்டியிருப்பதால், அதற்கான அனுமதி கோரி சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரிக்கு விண்ணப்பக் கடிதம் அனுப்பியுள்ளார். கடந்த நான்காம் திகதி தொடக்கம் தமது தொடர் கண்காணிப்பில் இருந்த காலத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பான எந்தவொரு தாக்கமும் காணப்படாததால், கொழும்பு செல்ல அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தனது சொந்த நாட்டுக்குச் சென்ற சீனப் பிரஜை கடந்த நான்காம் திகதி சாவகச்சேரிக்கு வந்துள்ளார். இவரின் வருகையால் சாவகச்சேரிப் பகுதியில் கொரோனா தாக்கம் தொடர்பாக மக்களிடையே வதந்தி பரவியது. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினர் அங்கு சென்று சீனப் பிரஜையுடன் கலந்துரையாடி, அவரை 14 தினங்கள் வெளியே செல்லாமல் தமது கண்காணிப்பில் இருக்குமாறு பணித்தனர்.

இதுவரை நாளும் தாம் தங்கியுள்ள வீட்டின் மேல் மாடியில் அவர் தங்கியுள்ளார். சாவகச்சேரி சுகாதாரத் துறையினர் தொடர் கண்காணிப்பில் வைத்திருந்தனர்.

சாவகச்சேரிக்கு வருகை தந்து 10 தினங்களுக்குப் பின்னர் அலுவலகக் கடமை நிமித்தம், கொழும்பு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து சீனப்பிரஜை தங்கியுள்ள இடத்துக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர், 14 தினங்கள் பூர்த்தியடைந்ததும் அவர் கொழும்பு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீர்க்குழாய் பொருத்தும் பணிக்காக ஆறு மாதங்களுக்கு முன்னர் இங்கு வந்துள்ள சீனப் பிரஜைகளில் மூவர்கடந்த ஜனவரிமாதம்தமதுசொந்த இடங்களுக்குச் சென்ற பின்னர் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இருவர் இன்னமும் வேலைக்கு வரவில்லை. இந்த நபர் மட்டுமே வந்துள்ளார்.

தற்போது தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐ ரோட், புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைக்கும் பணிகளை இந்த நிறுவனம் பொறுப்பெடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# நாடு திரும்பியோருக்கு முறைப்படி சோதனை!

### கண்டறியும் நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

**வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு இந்த மாதம் வருகை தந்தவர்கள் கொரோனா பரிசோதனையை முறைப்படி செய்துள்ளனரா? அவ்வாறு பரிசோதனை செய்யாமல் எவரும் உள்ளனரா? என்பது தொடர்பில் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.**



வெளிநாடுகளில் இருந்து வரும் போது கொரோனா தடுப்பு மையங்களுக்குச் செல்லாது நேரடியாக வந்தவர்களை இனங்கண்டு அவர்களைப் படையினரின் பொறுப்பில் உள்ள பரிசோதனை மையங்களுக்கு அனுப்பும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் நேற்று மாலை அதிரடியாக ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸார், மாகாண சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பின் பின்னர் குறித்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள நட்சத்திர விடுதிகள், தங்குமிடங்கள் என்பவை நேற்றுக் கடுமையாகச் சோதிக்கப்பட்டன. நேற்றுமட்டும் 7 விடுதிகளும், 4 தங்குமிடங்களும் பரிசோதிக்கப்பட்டன. (ம-105)

கொரோனா

## யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்

நாட்டில் ஏற்பட்டுள்ள 'கொரோனா' அச்ச நிலைமையில்மாநகர சபைபிரதேசத்தில் முன்னெடுக்க வேண்டிய அவசர நிலைமைகள் தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை ஆராயப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் ஏற்பாட்டில் சகல சுகாதாரத் தரப்பினரும் இணைந்ததாக இந்தக் அவசர கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி, சுகாதார அலுவலர்கள், போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மற்றும் மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினரும் உள்ளடங்கும் வகையில் கலந்துரையாடல் இடம்பெறும்.

கலந்துரையாடலில் 'கொரோனா' தொற்றுத் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய விழிப்புணர்வு நடவடிக்கைகள், அதனோடு ஒவ்வொரு திணைக்களங்களின் வகிபங்கு, அவற்றைமுன்கொண்டு செல்ல செய்யவேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள், தேவையேற்படின் உடனடியாக ஒருங்கிணைந்து முன்கொண்டு செல்லவேண்டிய பணிகள், அதற்கான உடனடி ஏற்பாடுகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்படும். இதேநேரம், இதன் தாக்கம் அதிகரித்தால் அல்லது சபை எல்லைப் பரப்புக்குள் இனங்காணப்பட்டால் யாழ் மாநகர சபை ஆற்ற வேண்டிய பங்குகள் அதன் படிமுறைகள் என அனைத்தையும் முற்கூட்டியே திட்டமிடுவதே இதன் நோக்கமாகவுள்ளது. வருமுன் காப்போம் என்னும் திட்டத்துக்கமைய இதனை மேற்கொள்வதாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார். (த-105)

## மூடப்பட்டது கசூரினா கடற்கரை

சுற்றுலா மையமான கசூரினா கடற்கரை மறுஅறிவித்தல் வரை பூட்டப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று காரணமாக நாட்டிலுள்ள சுற்றுலா மையங்கள் அனைத்தும் அரசின் அறிவுறுத்தலுக்கு அமைய பூட்டப்பட்டுள்ளன. வடக்கின் சுற்றுலா மையங்களில் ஒன்றான கசூரினா கடற்கரை பூட்டப்படுவதாக காரைநகர் பிரதேச சபையத் தவிசாளர் வி. கேதீஸ்வரதாஸ் அறிவித்துள்ளார். (ஒ.ந-50)

## விசாரணை வளையத்துள் வதந்தி பரப்பிய 23 பேர்

கொழும்பு, மார்ச் 16

கொரோனா தொற்றுத் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் போலித் தகவல்களைப் பரப்பிய 23 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், அவர்களிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், மக்களிடையே பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுத் தொடர்பில் போலித் தகவல்களை வெளியிடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், சமூக வலைத் தளங்களில் அவ்வாறான தகவல்களைப் பரப்புவோர் மீதும் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சமூக வலைத் தளங்களில் கொரோனா தொற்றுத் தொடர்பில் மக்களைக் குழப்பமடையச்செய்யும் வகையில் போலித் தகவல்களைப் பரப்பினர் என்று 23 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், அவர்களிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# பதற்றமடைய வேண்டாம்

### தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

கொரோனா வைரஸ் தொடர்பாக சமூக வலைத் தளங்களில் வெளியாகும் தவறான தகவல்களில் கவனம் செலுத்தி மக்கள் குழப்பம் அடையக் கூடாது. அதற்காக அரச தகவல் திணைக்களம் இந்த வைரஸ் தொற்றுத் தொடர்பான சரியான தகவல்களை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது என்று அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக்க கலுவேவ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பாக பொது மக்களுக்கு விரிவான வகையில் தகவல்களை வழங்குவதற்காக அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு நேற்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சமூக ஊடகங்கள் சில பொறுப்பற்ற வகையில் செயற்படுவது கவலைக்குரியதாகும். உண்மையான விடயங்களை உறுதி செய்து பொது மக்களுக்கு வழங்குவதற்காக சுகாதார அமைச்சு உள்ளிட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி கொவிட் 19 என்ற ஊடக மத்திய நிலையத்தை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

அதன் ஊடாகவே உறுதி செய்யப்பட்ட தகவல்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றது. வைரஸ் தொடர்பில் நாடு எதிர்கொண்டுள்ள சவாலுக்கு மத்தியில் அனைவருக்கும் அதில் பொறுப்புண்டு. இந்த வேலைத்திட்டங்களைச் சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது. சர்வதேச ரீதியில் தற்போது வளமிக்க நாடுகள் கூட பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளன.

அதனால் நாம் அனைவரும் வேறுபாடுகளை மறந்து இதில் இருந்து மக்களைக் காக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்பதைக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும். - என்றார். (ஏ)

## 11 நாடுகளுடனான தூதரக செயற்பாடு இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 16

கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளதால் 11 நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் நடவடிக்கைகளை இன்று திங்கட்கிழமை முதல் மட்டுப்படுத்துவதற்கு வெளிநாட்டு உறவுகள் அமைச்சு தீர்மானித்துள்ளது. இத்தாலி, ஈரான், தென் கொரியா, பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து, சுவீடன் மற்றும் ஒஸ்ட்ரியா ஆகிய நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரங்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன.

உலக நாடுகள் விமான பயணங்களுக்கு தடை விதித்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்புகொண்ட நபர்கள் தொடர்பாக சோதனைகளை முன்னெடுத்துள்ளது. (எ)

### கொரோனாவுக்கு காரணம் யார்?

# சர்வதேச விசாரணை கோருகிறார் மல்கம்!



**கொழும்பு, மார்ச் 16**

**கொரோனா வைரஸ் பரவுவதற்கான காரணம் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் கோரிக்கை விடுத்துள்ளார்.**

தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பில் நேற்றுக் காலை நடைபெற்ற கத்தோலிக்க ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக் கூட்டத்தில் உரையாற்றிய பேராயர், அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையுடன் சக்திவாய்ந்த நாடுகளை விளையாட அனுமதிக்க முடியாது என்று கூறினார்.

இயற்கைக்கு ஊறு ஏற்படுத்த முயன்றதன் விளைவாகவே கொரோனா வைரஸ் தோற்றம் பெற்றது.

இது குறித்து ஆராயப்பட வேண்டும்.

இந்த வைரஸ் பரவுவதற்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். அதன் பரவலுக்குக் காரணமானவர்களை ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் தண்டிக்க வேண்டும் இனிமேலும் இயற்கை வளங்களைப் பரிசோதிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும் பேராயர் வலியுறுத்தியுள்ளார். (எ-22)



## வீதியில் சிந்திய மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், மார்ச் 16

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று கருதி ஆயிரம் லீற்றர் நீர் தாங்கியில் மண்ணெண்ணையை நிரப்பி வாகனத்தில் கொண்டு சென்றபோது தாங்கியில் வெடிப்பு ஏற்பட்டதில், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக வீதியில் நேற்று மாலை சிந்தியது. இதையடுத்து அங்கு நின்ற சிலர் வீதியில் சிந்திய மண்ணெண்ணெயை போத்தல்களில் எடுத்துச் சென்றனர். (ஒ,5)

### கிளிநொச்சியில்

## வெடிபொருள் வெடிப்பு : பணியாளர் கைது

கிளிநொச்சி, மார்ச் 16



கிளிநொச்சி முரசுமோட்டை கோரக்கன் கட்டு குடியிருப்பில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வெடிபொருள்களை வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் நேற்றுக் காலை வெடிப்புச் சத்தம் கேட்டுள்ளது. அதனையடுத்து அங்கு விரைந்த இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர். இதன்போது வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற வீட்டை அடையாளம் கண்ட படையினர் அங்கு சோதனை நடத்தினர். வீட்டில் மேலும் சில வெடிபொருள்கள் இருந்ததாகத் தெரிவித்த பாதுகாப்புத் தரப்பினர், அவற்றை தாம் மீட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் ஒருவரைச் சந்தேகத்தில் படையினர் கைது செய்தனர். அவரை கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஒ,5,6,105)

## நாட்டுக்குள் வருவோர்மீது தீவிரமான கண்காணிப்பு!

### இராணுவத் தளபதி திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 16

வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கையர்கள் மருத்துவப் பரிசோதனை நிலையங்களில் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித் தாலும் அதனை பொருட் படுத்த போவதில்லை என்று இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எதிர்ப்பு தெரிவித்த இருவர் தொற்றுக்குள்ளாகியிருப்பது இணங்காணப்பட்டுள்ளது.

அதனால் எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் தனிமைப்படுத்தல் கண்காணிப்பின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் சிலர் மருத்துவப் பரிசோதனை நிலையங்களுக்குச் செல்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிகாரிகளுடன் முரண்படுகின்றமை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:



ஆரம்பத்தில் ஈரான், இத்தாலி, தென் கொரியா ஆகிய நாடுகளிலிருந்து வருபவர்களை மாத்திரமே கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்க ப்பட்டது. எனினும் பின்னர் வைரஸ் பரவலை அவதானித்து மேலும் 9 நாடுகளிலிருந்து வருபவர்களையும் கண்காணிப்புக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களது விருப்பம், விருப்பமின்மை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. அவர்கள் நிச்சயமாக கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். என்றார். (எ)

## தேர்தலை நடத்தலாமா?

### சுகாதார அமைச்சு அதிகாரிகளை சந்திக்கிறது தேர்தல் ஆணைக்குழு

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாக நாட்டில் அதிகரித்துள்ளதால் நாடு எதிர்கொள்ளும் அபாயங்கள் தொடர்பாக விவாதிக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு இன்று திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளது. கொரோனா வைரஸ் தொடர்பான அச்சம் நாட்டில் நிலவும் நிலையில் அதை எதிர்கொள்ளச் சுகாதார அமைச்சுடன் இணைந்து தேர்தல் ஆணைக்குழு செயற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்கள் அடிப்படையில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பான அடுத்தகட்ட நகர்வுகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் இதுதொடர்பாகத்தெரிவித்துள்ளதாவது இணையம் மூலம் பரப்புரை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பலர் இவ்வாறான முறையைப் பின்பற்றுகின்றனர். ஆனால் வீடு வீடாகச் சென்று பரப்புரைகள் மேற்கொள்வதே சிறந்தது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். தற்போதைய நிலவரங்களைப் பொறுத்தவரை, மக்கள் இவ்வாறான குழுக்களைத் தங்கள் வளாகத்துக்குள் நுழைய அனுமதிக்க விரும்புகிறார்களா என்ற சந்தேகம் எம்மத்தியில் காணப்படுகின்றது. ஆனால் முதல் முறையாகப் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் முகங்கள் அல்லது பெயர்கள் மக்களுக்குப் பழக்கமில்லாததால், அவர்களின் பரப்புரைகளுக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் ஒரு சவாலாக இருக்கும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். கொரோனா வைரஸ் பரவல் அடுத்த வாரமும் அதிகரித்தால் திட்டமிட்டபடி தேர்தலை நடத்தப் பின்பற்ற வேண்டிய செயன்முறைகள் தொடர்பாக நாளை விவாதிக்க வுள்ளோம். - என்றார்.

வைரஸ் தாக்கம் அதிகரித்தால் தேர்தல் பிற்போடப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், சுகாதார அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னர் தேர்தல் ஆணைக்குழு எடுக்க வேண்டிய ஒரு முடிவாக இது இருக்கும். இதுபோன்ற சூழ்நிலையில் தேர்தல்களை ஒத்திவைக்க ஒரு சரியான காரணம் இருக்க வேண்டும் என்று அவர் பதிலளித்துள்ளார். (எ)

# தொழுகைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 16

**கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பள்ளிவாசலில் அனைத்துத் தொழுகைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் வரை அனைத்து முஸ்லிம் பள்ளிவாசல்களில் தொழுகைகளை நிறுத்துமாறு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை அறிவுறுத்தியுள்ளது.**

நேற்று இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில்ஜம்மியத்துல் உலமா சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கொரோனாவைரஸின்தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் உலக சுகாதார நிறுவனமும், இலங்கைசுகாதார அமைச்சும் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மக்கள் ஒன்றுகூடும்சந்தர்ப்பங்கள்தவிர்க்கப்படல் வேண்டும் என்ற வகையில் மஸ்ஜித்களில் ஜுமுஆ, ஐவேளை ஜமாஅத் தொழுகைகள் உட்பட ஏனையஎல்லாவகையானஒன்றுகூடல்களையும்உடன்அமுலுக்குவரும் வகையில் மறு அறிவித்தல் வரும் வரை இடைநிறுத்துமாறு அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா நாட்டு முஸ்லிம்க ளை அன்பாக வேண்டிக் கொள்கின்றது.

இத்தகையசந்தர்ப்பங்களில்எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் அறிவுறுத்தல்களைக்கடைபிடிக்குமாறும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பள்ளிவாசல்களின் சம்மேளனங்கள் கண்டிப்போடுநடந்துகொள்ளுமாறும்வேண்டுகோள் விடுக்கின்றது. என்றுள்ளது. (எ-22)

## ஆன்மீக பிரார்த்தனை

வவுனியா,மார்ச்16

உலக நாட்டு மக்கள் அனைவரையும் பீதியில் ஆழ்த்திவரும் கொரோனா என்ற கொடிய வைரஸால் ஏற்படும் நோயைக் குணப்படுத்தவும், கொரோனா தொற்றைத் தடுக்கவும், இறந்தவர்களின் ஆத்மா சாந்திக்காகவும், நெய்விளக்கு ஏற்றி விஷேட பிரார்த்தனை வவுனியா குட்செட் வீதி ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் இன்றுதிங்கட்கிழமை மதியம் 1 மணிக்கு நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் தவறாமல் கலந்துஇறைவனைப் பிரார்த்தனை செய்யுமாறுஆலயநிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனனர். (க-18)

## யாத்திரையை தவிர்க்குமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச்16

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு யாத்திரைகள் மற்றும் சுற்றுலாப் பயணங்களைத் தவிர்க்குமாறு புத்தசாசன, கலாசார மற்றும் மத விவகாரங்கள்அமைச்சுபொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான பாதுகாப்பு நடவடிக்கையாகஇந்தஅறிவித்தல் விடுக்கப்படுகின்றதுஎன்று அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 10 பேர் வரை இனங்கானப்பட்டுள்ளதுடன் மேலும் 107 பேர் வரை கண்காணிப்பில்உள்ளனர். (எ)

## பிற்போடல்

யாழ்ப்பாணம்,மார்ச்16

2019-2020 ஆம் கல்வியாண்டுக்கான தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்விடிப்ளோமா பாடநெறிக்கான, யாழ்ப்பாண பிரதேச நிலையத்தின் ஆரம்பநிகழ்வுகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வு, எதிர்வரும் 22 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## அதிபர்களுக்கான செயலமர்வு இடைநிறுத்தம்

கிளிநொச்சி,மார்ச்16

கிளிநொச்சிக்கல்விவலயத்தின் அதிபர்கள்மற்றும் கல்வித்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு இடைநிறுத்தப்பட்டது. கிளிநொச்சி மத்திய கல்லூரியில் செயலமர்வு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு அதிபர்கள் உத்தியோகத்தர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் சமூகமளித்திருந்தனர். எனினும் செயலமர்வை கொரோனா முன்னெச்சரிக்கை காரணமாக இடைநிறுத்துவதாக கிளிநொச்சிவலயக்கல்விப்பணிப்பாளர்கி. கமலராஜன் அறிவித்தார். அதனையடுத்து செயலமர்வு நிறுத்தப்பட்டது. (க-214)

## கொரோனா நீங்க விசேட வழிபாடு

கொரோனா தாக்கத்திலிருந்து விடுபட வேண்டி, இலங்கையில் உள்ள அனைத்து சைவ ஆலயங்களிலும், குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள ஆலயங்களில் விசேட வழிபாடுகளை இன்று திங்கட்கிழமை முதல்புதுவருப்பிறப்புவரைதினமும்மாலை4மணி தொடக்கம் 5 மணி வரையான நேரத்தில் மேற்கொள்ளுமாறுசர்வதேசஇந்துமதகுருமார்ஒன்றியம்வேண்டுகோள்விடுத்துள்ளது. இதுதொடர்பில்ஒன்றியத்தின் தலைவர்கு. கெஜகதீஸ்வரக்குருக்கள்அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா நீங்க வேண்டி இந்த வழிபாட்டை மேற்கொள்ளவும். ஆலயம் சார்ந்த சிவாச்சாரியர்கள், குருமார்கள், ஆலயநிர்வாகத்தினர், இந்துசமய அமைப்பினர் அதற்கான ஊக்குவிப்பை வழங்க வேண்டும். அத்துடன் மாலை 6 மணிக்கு தினமும் இல்லங்களில் தீப விளக்கேற்றி நம் உறவுகளுக்காக வேண்டிக் கொள்வோம். அமைதியான வழிபாடுகளே கொரோனாதாக்கம், அதன்பீதியிலிருந்துவிடுபடவழி வகுக்கும். வேத, திருமுறை, பாராயணம், நாம அர்ச்சனைமுறைமைபிரார்த்தனையைபங்குனித்திங்கள் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலய வழிபாடு செய்யும் முதல் நாளில் ஆரம்பித்து வழிபாடுகளில் ஈடுபடுவோம். என்றுள்ளது. (க)

## மும்மொழி பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

வடக்கு மாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தால் நடத்தப்பட்ட அனைத்து கற்கை நெறிகள் மற்றும் தவணைப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (க)

## கொரோனா தடுப்பில் சுகாதார பரிசோதகர்கள்

கொழும்பு, மார்ச்16

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் சுமார் 2ஆயிரத்து500பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வெளிநாடுகளிலிருந்து நாட்டிற்கு வருபவர்களைப்பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளனர் என்று இலங்கை பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார். (எ)



## விஷேட துஆ பிரார்த்தனை

மட்டக்களப்பு, மார்ச்16

கொரோனா வைரஸ்தொற்றிலிருந்து உலக மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டி, பிரார்த்தனை நிகழ்வொன்றுமட்டக்களப்புஏறாவூர்பிரதேசத்தில்நடைபெற்றது.

ஏறாவூர்சமூகசேவைகள்அமைப்பின்ஏற்பாட்டில், அதன்தலைவர்எஸ்.எம்.அஹமட்தலைமையில் வாளியப்பா ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மௌலவி எஸ்.எல். பரீட் பிரார்த்தனையை நடாத்தினார்.

இரவுநேரத் தொழுகையைத் தொடர்ந்து, விசேட பிரார்த்தனைநடைபெற்றது. இந்நிகழ்வில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ந-150)

## நலம் வேண்டி பூசை



வவுனியாவில் கொரொனா வைரஸில் இருந்து உலக மக்களை காக்க வேண்டி யாக பூஜை இடம் பெற்றது. வவுனியாதோணிக்கல்விசாலாட்சிஅம்பிகா சமேத விஸ்வநாதர் திருக்கோவில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், நேற்று இடம்பெற்ற இவ் வழிபாட்டை பிரபாகரக் குருக்கள் தலைமையேற்று நடத்தியிருந்தார். கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளாகியுள்ளமக்களின்நல்வாழ்வுக்கான பிரார்த்தனைகள் இடம்பெற்றதுடன், விசேட யாக பூஜையும் இடம்பெற்றிருந்தது. அனைத்து அடியார்களும் உலக மக்களுக்காக நெய் விளக்கேற்றி வழிபாடுகளிலும் ஈடுபட்டதுடன வழிபாட்டின் இறுதியில் தமிழருவி சிவகுமாரனின் சிறப்புரையும் இடம்பெற்றிருந்தது. (எ-110)

## தவக்கால யாத்திரைகளை தவிர்க்கும்படி கோரிக்கை!

*மன்னார் ஆயர் விடுத்தார்*

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மக்கள் தவக்கால யாத்திரைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று மன்னார் மாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக கத்தோலிக்க இறைமக்கள் கிறிஸ்துவின் இறப்பைப்பற்றிச் சிந்திக்கும் இந்த நாட்களில் மன்னார் மறைமாவட்ட இறைமக்களும் இக் காலங்களில் கல்வாரி நோக்கிய பாதயாத்திரிகள் கல்வாரி திருத்தலங்களுக்குச்சென்றுபரிசுத்தவாரங்களை அனுசரிப்பது என்பவை வருடந்தோறும் இடம்பெறுவது வழமையாகும்.

ஆனால் நாட்டில் தற்பொழுது அச்சுறுத்திவரும் கொரானா வைரஸ் பீடிப்பினால் மரணங்களுக்கான அச்சுறுத்தல் ஏற்படத் தொடங்கியுள்ளமையால் மன்னார் மாவட்டத்துக் கத்தோலிக்க மக்கள் வெளி மாவட்டங்கள் மற்றும் உள்மாவட்டத்திலும் இருந்துவரும் கல்வாரி திருத்தலங்களுக்கு பங்கு ரீதியாகவோ அல்லது குழுக்க ளாகவோ செல்ல வேண்டாம். - என்றார். (ம-60)

## இத்தாலியில் இருந்து வந்தோரை இனங்காண்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 16

மார்ச் முதலாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை இத்தாலியிலிருந்து இலங்கைக்கு வந்த அனைத்து நபர்களையும் அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: இவ்வாறு அடையாளம் காணும் நபர்களில் கொரோனா தொற்று போன்ற அறிகுறிகள் உள்ளோரை தனிமைப்படுத்தி விசேட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் இத்தாலியிலிருந்து இலங்கை வந்தோர் சுயமாக தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கை பொலிஸ்துறை மற்றும் சுகாதார சேவைகளின் ஆதரவுடன் தனிமைப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். இதுவரை நாட்டில் நாட்டுக்குள் பதிவான கொரோனா வைரஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 10 ஆகும். அதில் இத்தாலியிலிருந்து வந்த 56 வயது பெண்ணும், 17 வயதுடைய இளைஞரும் அடங்குவர்.

மீதமுள்ள நோயாளிகள் வெளிநாட்டிலிருந்து நாட்டிற்குள் வந்துள்ளனர் அல்லது வெளிநாட்டினருடன் தொடர்புடையவர்கள்.- என்றார். (எ)

## போதிய மருத்துவ வசதியை வழங்குவதற்குத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 16

நாட்டில் பரவியுள்ள கொரோனாவை வெற்றி கொள்ளத் தேவையான அளவு சுகாதார வசதிகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கொரோனாவைத் தடுப்பதற்காக எந்தவித கட்டுப்பாடுமின்றி மருந்து வகைகள், பாதுகாப்பு கவசங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தலைமையில் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று அமைச்சில் நடைபெற்றுள்ளது.

மருத்துவ வழங்கல் அதிகாரிகள், அரச மருந்தக கூட்டுத்தாபன அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். இந்த பிரிவுகளுக்குத் தேவையான நிதிகளை விரைவாக வழங்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 2 தினங்களுள் தேவையான மருந்து உள்ளிட்ட பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றை உடனடியாக வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### கொரோனா அச்சம்

## ஆடைத் தொழிற்சாலைகளின் பணிகளை நிறுத்தக்கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலைகளின் பணிகளை இடைநிறுத்துமாறு, இரண்டு மாவட்டச் செயலர்களிடம், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஜீவராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன், அரச விடுமுறை மற்றும் கூட்டங்கள் கூடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதிகமான பணியாளர்கள் கிளிநொச்சி ,முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றி வருகின்றனர். தொடர்ந்தும் இந்த ஆடைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

எனவே இவற்றைக் கருத்தில் எடுத்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இரண்டு மாவட்டங்களினதும் செயலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-35)

# கொரோனா தொடர்பில் விழிப்போடு இருங்கள்!

சாவகச்சேரி, மார்ச் 16

**இருமல், தும்மல், தடிமன், மூச்சு விடச் சிரமம் ஆகியவையே 'கொரோனா' வைரஸின் அறிகுறிகள். இவ்வாறான அறிகுறிகள் காணப்படுவர்கள் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனைக்குச் செல்லுங்கள்." என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி சு.சுதோகுமார் அறிவுறுத்தியுள்ளார்.**

'கொரோனா' வைரஸ் தொற்றால் இலங்கையில் நேற்றுவரை 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 103 பேர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆயிரத்து 600 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், சுகாதார மருத்துவ அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:

**எரிக்கவேண்டும்**

இருமல், தும்மல் ஏற்படும் போது ரிசு அல்லது ரிசு போன்றுள்ள மென்மையான துணியைப் பயன்படுத்துங்கள். பின்னர் அதை எரிக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார் .

**கூட்டமாக நடமாடாதீர்!**

'கொரோனா' பரவுவதற்கு கூட்டமாக நடமாடுகின்றமையே காரணம். மங்கள நிகழ்வுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வோர் இயன்றளவு தனிமையாக இருக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**புலம்பெயர் உறவுகளின் வருகை**

புலம்பெயர் நாடுகளிலிருந்து உறவினர்கள் வந்தால் 14 தினங்கள் வெளியே செல்லாமல் தடுப்பது சிறந்த வழி. புலம்பெயர் நாடுகளிலிருந்து உறவினர்கள் வந்தால் அவர்கள் தொடர்பான விவரங்களைத் தமது பிரிவுக் கிராம அலுவலர், சுகாதார அலுவலர்கள் ஆகியோருக்கு அறிவித்தல்வேண்டும். அறிவித்தால்தான் புலம்பெயர் நாடுகளிலிருந்த வருவோரை இந்த அலுவலர்கள் நேரடியாகக் கண்காணிக்க வசதியாக இருக்கும். அவர்களிடம் நோய் அறிகுறிகள் காணப்படின் அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகளை எடுத்து நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

**விழிப்புணர்வு ஏற்பாடுகள்**

கிராம மக்களுக்கு 'கொரோனா' வைரஸ்தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது பிரதேசத்தில் 'கொரோனா' வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி பொதுமக்களின் கைகளில்தான் உள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த-9)

## சீனாவைச் சேர்ந்தோர் மீது அதிக கரிசனை அவசியம்

### வலியுறுத்துகிறார் அகிலவிராஜ்

கொழும்பு, மார்ச் 16

சீனாவிலிருந்து வரும் பயணிகளை தொற்று நீக்கக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுப்படுத்துவது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பில் அக்கறையின்றி இருப்பதால் நாட்டு மக்களே பெரிதும் பாதிப்புக்குள்ளாகுவார்கள்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ்காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலகளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸின் காரணமாக பெரும் அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது. வைரஸ் பரவலை தடுப்பது தொடர்பில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். வைரஸ் காரணமாக பெரும் தொகையானோரை ஒன்றுகூட வேண்டாம் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு எமது தேர்தல் பரப்புரைகளையும், அதற்கான மக்களின் பங்குப்பற்றலையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ள எதிர்பார்த்திருக்கின்றோம்.

வேட்பு மனுத் தாக்கலின் பின்னரே எமது தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம். இதன்போது குறிப்பிட்டளவில் மாத்திரமே பரப்புரைகளை நடத்த எதிர்பார்த்திருக்கின்றோம். எமது கட்சியின் வேட்பாளர் பெயர்ப் பட்டியலும் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் அனைவரையும் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் சுகாதார பிரிவினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றோம். என்றார். (எ)

## முல்லைத்தீவு மாவட்ட ரியூசன்களை மூடவும்

### மாவட்ட மேலதிக செயலர் அறிவுறுத்து

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களை மூடும்படி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் பணித்துள்ளது. இது தொடர்பிலான அறிவிப்பை மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன் மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார்.

'கொரோனா' வைரஸ் தொற்றுக் காரணமாக கல்வி அமைச்சு எடுத்த தீர்மானத்தைத் தழுவி வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள், இதர சமய வகுப்புக்கள் உள்ளடங்கலாக மாணவர்கள் ஒன்றுகூடும் அனைத்துக் கல்விச் செயற்பாடுகளுக்கும் எதிர்வரும் ஏப்ரல் 20 ஆம் திகதி வரை தற்காலிகத் தடை விதிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உரிய கண்காணிப்பைக் கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அலுவலர்கள் ஊடாகக் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. (த-19)

### கொரோனாவால்

## இலாபம் தேடும் சில வர்த்தகர்கள்

யாழ். நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றின் எதிரொலியாகப் பொருள்களுக்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அவற்றின் விலையை அதிகரித்து விற்பனை செய்வதில் வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர். அநேகமான மக்கள் கூடுதலான பொருள்களைக் கொள்வனவு செய்வதை அடுத்து, வர்த்தக நிலையங்களில் சேமிப்பில் இருந்த பொருள்கள் யாவும் விற்றுத் தீர்ந்தன. மக்களின் நெரிசல் மற்றும் பொருள்களின் விற்பனை சூடு பிடித்ததை அடுத்து, இந்த பொருள்கள் சிலவற்றின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொருள்களின் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகரித்த விலைக்கு விற்கும் வர்த்தகர்கள் மீது விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-17)

# கூட்டமைப்பு 18இல் வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 16

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை வடக்கு கிழக்கு முழுவதும் எதிர்வரும் 18 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய தமிழ்க் கட்சிகள் தாக்கல் செய்யவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தமாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்ததன் அடிப்படையில் நாடு முழுவதும் சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துவருகின்றன.

தெற்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகளோ வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்து வப்படுத்தும் பிரதான கட்சிகளோ இதுவரைக்கும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளோ வேட்பாளர்களை இறுதி செய்வதில் இழுபறி நிலையில் உள்ளது. குறிப்பாக வேட்பாளர்களை இறுதிசெய்வதில் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளால் வேட்புமனுத் தாக்கல் செய்வதிலும் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.


இந்தநிலையில்தான் எதிர்வரும் 18 ஆம் திகதி வடக்கு கிழக்கு எங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது

அதேபோன்று முன்னாள் முதலமைச்சர் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் அன்றையதினமே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளது என்று தெரியவருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அன்றையதினமே வேட்பு மனுத் தாக்கல் செய்யவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வேறு சிலகட்சிகள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் திகதி தொடர்பில் இதுவரைமுடிவுகள் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-20)

# விக்கியின் சுவரொட்டி 3பேர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரனின் படம் பொறிக்கப்பட்ட தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் சுவரொட்டிகளுடன் மூன்று பேர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றிரவு கைது செய்யப்படனர்.

தேர்தல் சுவரொட்டிகளை முச்சக்கர வண்டியில் கொண்டு சென்ற போதே அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு காங்கேசன்துறை வீதி உப்புமடத்தடியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று என்றும் பொலிஸார் மேலும் தகவல் தெரிவித்தனர். (ஒ.5,20,105)

### ஆலயங்களில் ஒன்றுகூடாதீர்கள்:

# வீடுகளில் இருந்து வழிபாடு செய்யுங்கள்

## ஆதீன குரு முதல்வர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஆலயங்களில் பெருமளவில் திரண்டு வழிபடுவதை தவிர்த்து வீடுகளில் ஆத்மார்த்தமாக வழிபாடு செய்வதன் மூலம் கொரோனாவின் பிடியில் இருந்து பாதுகாப்பு பெறுவதுடன் அது பரவுவதையும் கட்டுப்படுத்த உதவுங்கள் என்று சைவ மக்களிடம் ஆதீன குரு முதல்வர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா தாக்கம் குறித்து நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் சிவத்திரு அகத்தியர் அடிகளார், மெய்கண்டார் ஆதீன முதல்வர் தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் ஆகியோர் இணைந்து மேற்படி வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா அபாயத்துக்கு எமது நாடும் உட்பட்டுள்ளது. தடுப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சைவ மக்களையும் ஆலயங்களையும் கேட்டுக்கொள்கின்றோம். திருவிழாக்களை இயன்றளவு எளிமையாக மக்கள் நெரிசல் இல்லாமல் நிகழ்த்த ஏற்பாடு செய்யுங்கள். விசேட நிகழ்வுகளை தவிர்ப்பதுடன் அன்னதானம் வழங்குவதையும் தவிர்த்து கொள்ளுங்கள்.

புலம்பெயர் தேசங்களில் இருந்து இரு வாரங்களுக்குள் நாட்டுக்குத் திரும்பிய வர்கள் ஆலயங்களுக்குச் செல்வதை முற்றாக தவிர்த்து கொள்ளுங்கள். இந்த கொடிய நோயிலிருந்து உலக மக்களை காப்பாற்ற இறைவனை மனமுருகி பிரார்த்திப்போம், என்று தெரிவித்துள்ளனர். (ஒ,5)

# அழகக சங்க கூட்டம் ஒத்திவைப்பு

வவுனியா, மார்ச் 16

வவுனியா மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை செவ்வாய்க் கிழமை இடம்பெறவிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலர் ஜெ.ஜெகராசா தெரிவித்தார்.

எனவே சிகை அலங்கரிப்பு நிலையங்களை நாளை திறக்குமாறும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5,18)

### கொரோனா அச்சம்

# முகக் கவசங்களுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

கொரோனா வைரஸ் தொற்றின் பீதியால் மக்கள் முகக் கவசங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அலைந்து திரிகின்றனர்.

மருந்தகங்களில் இருந்த முகக் கவசங்கள் யாவும் விற்றுத் தீர்ந்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

முகக் கவசங்களைப் பெற்றுக் கொள்வதற்கு யாழ். நகரில் உள்ள மருந்தகங்களுக்குச் சென்று மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்

மருந்தகம் ஒன்றில் இருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட முகக்கவசம் ஒரே நாளில் விற்றுத் தீர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ந-17)

# ரெலோவிலிருந்து உறுப்பினர் விலகல்

மன்னார், மார்ச் 16

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து விலகிக் கொள்வது தொடர்பாக அந்தக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கியுள்ளார் மன்னார் நகர சபை உறுப்பினர் மனோ ஐங்கர சர்மா.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடவுள்ள நிலையில், தான் கட்சியில் இருந்து விலகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (க-56)

# பனை வடலிக்கு வைத்த தீ எரிந்தது எண்ணெய் ஆலை

யாழ்ப்பாணம், மார்ச் 16

பனை வடலிக்கு வைத்த தீயால் அயலில் உள்ள தேங்காய் எண்ணெய் ஆலை முற்றாக எரிந்துள்ளது.

தீயை அணைக்க பல பவுசர்களில் நீர் கொண்டு வரப்பட்டு ஊற்றிய போதிலும் தீயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பல லட்சம் ரூபா பெறுமதியான கொப்பறா, பொச்சு மற்றும் ஆலை இயந்திரங்கள் என்பன எரிந்து சாம்பலானது.

இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழில் நேற்று இடம்பெற்றது.

தேங்காய் எண்ணெய் ஆலைக்கு சற்றுத் தொலைவில் காணப்பட்ட பனை வடலிக்கு நேற்று மதியம் தீயிட்டு ள்ளனர். தீ வேகமாகப் பரவி தேங்காய் எண்ணெய் ஆலையில் காணப்பட்ட பொச்சுக்களில் பிடித்து எரியத் தொடங்கியது. தீ வேகமாகப் பரவியதால் பவுஸர்களில் நீர் கொண்டு வரப்பட்டு ஊற்றிய போதிலும் கட்டுப்படுத்த முடிய வில்லை. அதற்கிடையில் ஆலை எரிந்து சாம்பலாகியது. (ஒ.5.9)

# சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றைத் தடுக்க நடவடிக்கை

## பிணை வழங்கக்கூடிய கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஆலோசனை

கொழும்பு, மார்ச் 16

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிணை வழங்கக் கூடிய கைதிகளை விடுவிப்பது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

கொரோனா தொற்று பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.டபிள்யூ. தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பிணை வழங்கப்பட்ட போதிலும், அந்தப் பணத்தைச் செலுத்த முடியாது சில கைதிகள் சிறைச்சாலை களில் உள்ளனர். இதன் காரணமாக, சிறைச்சாலைகளில் கடும் நெருக்கடி நிலவுகின்றது. அவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது எனத் தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அநுராதபுரம் மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலை களில் கொரோனா தொற்றுடையதாகச் சந்தேகிக்கப்படும் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் ஒருவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கும் மற்றவர் கந்தக்காடு கண்காணிப்பு நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை கள் ஆணையாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார். (ஒ,5,22)

## கொரோனா

# அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுக

## கோத்தாவுக்கு ரணில் அவசர கடிதம்

கொழும்பு, மார்ச் 16

இலங்கையை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தொற்று மற்றும் அதனோடு இணைந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு அவர் நேற்றுக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸை ஆபத்தான தொற்று நோயாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

தொற்று நோய் மையப்பகுதியான சீனாவில் இருந்து இந்த வைரஸ் தற்போது ஐரோப்பாவில் மிக மோசமாக தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அமெரிக்கா தேசிய அவசர கால நிலையை அறிவித்துள்ளது. பல மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் நாடுகளுக்கு வெளிநாட்டவர்கள் வரத் தடை விதித்துள்ளன.

எமது நாட்டில் சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு, ஈஸ்டர், ரமழான் மற்றும் பொதுத் தேர்தல் போன்றன விரைவில் வரவுள்ள நிலையில் இங்கு கொரோனா வைரஸ் பரவுவது சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

சிறு வணிகர்கள், விவசாயிகள், அரசு பொது மற்றும் தனியார் துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் இதனால் பாதிக்கப்படலாம். இந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை அரசு உருவர்க்கியுள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிந்தது. பொதுமக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் அந்தத் திட்டம் குறித்து பொதுவெளியில் அறிவிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

கொரோனா பரவுவதைத் தடுப்பது மட்டுமல்லாமல் இதன் பின்னணியில் எழக்கூடிய சமூக பொருளாதார சிக்கல்களைத் தணிக்க ஏதுவாக ஒரு விரிவான ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டத்தை வடிவமைக்க வேண்டிய தேவை உள்ளதாக நான் நம்புகிறேன்.

இந்த நிலையில் இந்த விடயங்கள் குறித்து ஒரு விரிவான மூலோபாயத்தை உருவாக்க ஏதுவாக அனைத்து அரசியல் கட்சிகளின்



தலைவர்கள், பிற தொடர்புடைய அமைப்புகள் மற்றும் அதிகாரிகளின் கூட்டத்தை கூட்டுமாறு கோரிக்கை விடுக்கிறேன் என்றுள்ளது.

இதேவேளை, இலங்கையின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில்கொண்டு எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோத்தாவிடம் நேற்றுமுன்தினம் கடிதம் மூலம் அவசர வேண்டுகோளை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஒ.5,22)

## பொதுமண்டபத்துக்கு அடிக்கல்

நிறைந்த கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் கிளிநொச்சி மருதநகர் கிராமத்தில் (இராமநாதன் பாம்) பொது நோக்கு மண்டபத்துக்கு அடிக்கல் நடப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் முருகேசு சந்திரகுமார் அதற்கான அடிக்கல்லை நட்டார். நிகழ்வில், சமத்துவக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-222)



## நிதி ஒதுக்கீடுகளை சமமாகப் பகிரவும்

### பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 16

பிரதேச சபையின் வருமானங்களுக்கு ஏற்றவாறு ஒதுக்கீடுகள், அனைத்து வட்டாரங்களுக்கும் சமமாகப் பகிரப்பட வேண்டும் என்று புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் சாந்தி கோரிக்கை விடுத்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வியாழக்கிழமைநடைபெற்றது. அமர்வில்கன்னிஉரைஆற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, புதுக்குடியிருப்புப் பிரதேச சபை, நீண்ட காலமாக மக்கள் பிரதி நிதிகளைக் கொண்ட சபையாகக்காணப்படுகிறது. அதேவேளை, கூட்டமைப்பினரே தொடர்ந்து ஆட்சி அமைத்து வருகின்றனர். தற்போது ஆட்சி அமைத்து இரண்டுவருடங்கள்நிறைவுற்றுள்ள போதும், மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. பின்தங்கிய கிராமங்களுக்கும் உள்ளூராட்சி சபை சரியானமுறையில்அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

(க-246)

## கொரோனா தொற்று

## சிகிச்சையளிக்க மறுத்த மருத்துவரிடம் விசாரணை

கொழும்பு, மார்ச் 16

நீர்கொழும்பு மருத்துவமனையில் கொரோனா தொற்றுக்குள்ளானதாக சேர்க்கப்பட்டவருக்கு சிகிச்சையளிக்க மறுத்த மருத்துவரிடம் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு தேசிய மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரியுள்ளது.

இந்தச் சம்பவம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டால் மருத்துவர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று இருப்பதற்கான அறிகுறிகளுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிலர் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவ அதிகாரிகள் மருத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை அளிக்க மறுத்த மருத்துவர் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு தேசிய மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## கொரோனா வைரஸ்

## தகவல்களைத் தெரிவிக்க பெற்றுக்கொள்ள இலக்கம்

கொழும்பு, மார்ச் 16

கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை தெரிவிக்க மற்றும் பெற்றுக் கொள்ள தொலைபேசி இலக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொடர்பில் பொது மக்கள் ஏதேனும் தகவல்களை அறிந்து கொள்வதற்கு அல்லது அது தொடர்பாக தெரிவிக்க வேண்டுமாயின் அதற்காக 117 என்ற தொபேசி இலக்கம் செயற்படுவதாக ஜனாதிபதி செயலணி அறிவித்துள்ளது.

(ஒ.5)

## உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

கூட்டுறவு அமைப்புக்களின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளன.

நாட்டின்உள்ளூர்உற்பத்தியைசகலமாவட்டங்களுக்கும் பண்டமாற்று வசதியை ஏற்படுத்தி பொருள்களுக்கு அதிக சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்தவியாழக்கிழமைகொழும்புகூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களத்தில் இதுசம்பந்தமான கூட்டம் இடம்பெற்றது. நாட்டின் உள்ளூர் உற்பத்தி வளத்தை அதிகரிக்கும் நோக்குடன் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக இப் பொருள்களை அதிகமாக சந்தைப்படுத்தவும்நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் இவ் உற்பத்திபொருள்கள் பண்டமாற்றுச் செய்யப்படும்.

இந்தப் பண்டமாற்று மூலம் உற்பத்திப் பொருள்களை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் அத்துடன் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு இதன் மூலம் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.

(ந-17)

# கொரோனா தொற்றை மறைத்தால் சிறை

கொழும்பு, மார்ச் 16


கொரோனா வைரஸ் தொற்று கொண்ட அல்லது அந்த விடயம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ள ஒரு நபர் தனது நோய் தொடர்பான தகவல்களை மறைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இவ்வாறானோர் குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்டால் ஆறு மாத கால சிறைத்தண்டனை வழங்கப்படும். இவர்கள் எதுவித பிடியாணையும் இல்லாமல் நேரடியாக கைது செய்யப்படுவார்கள் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

(ஒ.5)

ரோபலிசம் @iY_chiku 13h
தன் கையே தனக்கு
எதிரி என
ஆக்கிவிட்டது
கொரோனா !

போன வருசம் முகத்தை மூடினா
பிரச்சனை,
இந்த வருசம் முகத்தை மூடாட்டி
பிரச்சனை
வாழ்க்கை ஒரு வட்டம் பாத்தேலா..





என்னடா கை
இப்படியிருகு








நமக்கு பிடிச்சமாதிரி
Life ஒருநாள் மாறும்


அப்போது ஒன்னு தலையில் 'நர'
தள்ளியிருக்கும்
இல்ல...
"வாயிலை 'நொர' தள்ளியிருக்கும்..

# மீண்டும் சரித்திர கதையில் நயன்தாரா?



தமிழ்த் திரையுலகில் தொடர்ந்து நம்பர் 1 இடத்தில் இருக்கும் நயன்தாரா வித்தியாசமான கதை, கதாபாத்திரங்களைத் தேர்வு செய்து நடித்து வருகிறார். கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளும் குவிகின்றன. ஏற்கனவே நயன்தாராவை முதன்மைப்படுத்தி வந்த 'மாயா', 'அறம்', 'கோலமாவு கோகிலா' உள்ளிட்ட படங்களுக்கு வரவேற்பு கிடைத்தன.

ஸ்ரீர்ராமராஜ்ஜியம், சைரா நரசிம்ம ரெட்டி போன்ற புராண சரித்திர கதைகளிலும் நடித்துள்ளார். தற்போது கன்னியாகுமரி பகவதி அம்மன் மகிமைகளைச் சொல்லும் 'மூக்குத்தி அம்மன்' பக்தி படத்தில் விரதம் இருந்து நடித்துள்ளார். இந்தப் படம் விரைவில் திரைக்கு வருகிறது. இந்த நிலையில் கன்னடத்தில் தயாராகும் 'ராஜவீர மடகாரி நாயகா' என்ற சரித்திரக் கதையில் நடிக்க நயன்தாராவிடம் பேசி வருகின்றனர். இந்தப் படத்தைத் தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளிலும் வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.







## கொரோனா...

8 பேர் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளது.


ஜேர்மனுக்குப் பயணம் செய்து கொரோனா தொற்றுக்குளான ஒருவருடன் பயணித்த 45 வயதுடைய மற்றொருவருக்கு நேற்று மாலை தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதேவேளை, கந்தக்காடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்கியிருந்த 7 பேருக்கு கொரோனா பாதிப்புக்கு உள்ளாகினர்என்பதுபரிசோதனைகளில் நேற்றிரவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தாலி நாட்டிலிருந்து வந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து இலங்கையில் நேற்றிரவு வரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு 18 பேர் இலக்காகியுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ.5,22)

# சகல கலைகளின் சங்கமம் சினிமா!



எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.
முன்னாள் பொதுச் செயலர்,
'சலனசித்திரம்'
திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனம்

கலைகளுள் அதிசக்தி வாய்ந்த ஊடகமான சினிமா, சகல கலைகளின் சங்கமமாக விளங்குகின்றது. கட்புல, செவிப்புல வாயிலாக மனித மனங்களில் விருட்சமாகும் ஒன்றாக சினிமா காணப்படுகின்றது. கலை இன்பத்தைப் பருக வைப்பதாகவும், கருத்துக் குவியல்களின் கொள்கலமாகவும் அது உள்ளது. மனிதனின் அழகியல் உணர்வை அனுபவிக்கத் தூண்டி வாழ்வை நயம்படத் தரிசிக்க வைக்கும் ஒன்றாக இருந்து மனிதனது சிந்தனை




ஓட்டத்தைச் சீர்செய்து சிரிக்க வைக்கும் ஒன்றாகவும் சினிமாவை நாம் கருத முடிகிறது.

1895 மார்ச் மாதம் 15ஆம் நாள் மனித சமூகம் மாபெரும் சமூகமாக மாற்றம் பெற உதவிய மகத்தான நாள். அன்றைய தினம் பிரான்ஸ் நாட்டில் அசையா நம்பிக்கையுடன் அசையும் படத்துக்கான முதலாவது ஒளிப்பதிவு மிக வெற்றிகரமாக நடந்தேறியது. முன்னர் மௌனப்படம், பின்னர் பேசும்படம் என்றுயர்ந்து நிற்கும் சினிமாவின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் 125 ஆண்டுகளுக்குப் பின் இன்று நாம் திரும்பிப் பார்க்கின்றோம். சினிமா ஒரு கலையா? ஊடகமா? வர்த்தகப் பண்டமா? தொழிலா? என்பது பதிலிறுக்கப்பட வேண்டிய வினா.

**எங்கும் சினிமா
எதிலும் சினிமா**

சினிமாவைப் பார்க்காதவர் இல்லை. இரசிக்காதவர் இல்லை. மனதைப் பறிகொடுக்காதவர் இல்லை என்று கூறுமளவுக்கு அதன் செல்வாக்கு உலகின் எல்லைகளைக் கடந்து நிற்கின்றது. சினிமா இன்று விரும்பியோ விரும்பாமலோ ஒவ்வோர் இல்லத்துக்குள்ளும் நுழைந்திருக்கிறது. சினிமா மூலம் மக்கள் தலைவர்கள் உருவானார்கள். திரையில் நிழலாகக் காட்டியதை நிஜமாக்கிக் காட்டினார்கள். உலகில் புதியதொரு புரட்சியும் எழுச்சியும் தோன்ற சினிமாவும் ஒரு வகையில் வித்திட்டது.

மக்கள் தொடர்பு ஊடகங்களில் அதிசக்தி வாய்ந்த தன்மை கொண்டது சினிமா என்ற கருத்தை எவரும் மறுக்க முடியாது. மனித வாழ்வின் சகல கூறுகளையும் நிதர்சனமாக வெளிக்கொணர்வதிலும் எளிமையாக்குவதிலும் வெற்றி கண்டுள்ள துறையாக திரைக் கலைத்துறை விளங்குகின்றது.

சமூகச் சீர்கேடுகளைத் தட்டிக் கேட்கவும் ஒடுக்கு முறைக்கெதிராக குரல்கொடுக்கவும் மனித சமூதாயத்தில் நற்பண்புகளை வளர்க்கவும் பயன்பட்டு வந்த சினிமா இன்று இளைய தலைமுறையின் எதிர்காலத்தை சீரழிக்கக் கூடிய அளவுக்குத் தரங்கெட்ட ஒன்றாக மாறி வருவதாக பல தரப்பில் இருந்தும் கண்டனக்குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இது ஒரு வகையில் நியாயமாக இருந்தாலும், சமூகத்தின் பிரதி விம்பமாக சமூகத்தின் உண்மை நிலையைப் பிரதி பலிக்கின்ற பணியையே சினிமா ஆற்றுகின்றது என்ற வாதத்தையும் நாம் நிராகரித்து விட முடியாது.

**சினிமா பற்றிய
புரிதல் வேண்டும்**

சினிமாவும் ஒரு கலைவடிவம் என்ற சட்டகத்தினுள் வருவதால், அது பற்றிய சரியான பார்வையும் விழிப்பு ணர்வும் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்குத் திரைக்கலை தொடர்பான விரிவுரைகள் பாடசாலை மட்டத்திலிருந்து உயர் கல்விக் கூடங்கள் வரை ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

அதன் வாயிலாக சினிமா மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், விமர்ச்சிக்கப்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

"ஈழத்தில் தமிழ்த் திரைப்படத் துறையென ஒன்று வளர்ச்சியடையவில்லை. இதன் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் காரணிகளும் பலவுண்டு என்று 1989-90 காலப்பகுதி யில் 'திசை'வார வெளியீட்டில் 'தூவானம்' பத்தியை எழுதி வந்த 'நீலாம்பரன்' தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். இலங்கையில் தமிழ்த்திரைப் படத்துறை வளர்ச்சியடையாமைக்கு மாறிமாறிப் பதவிக்கு வரும் இனவாத அரசுகளின் ஒடுக்கு முறையே காரணமாகும்.

தமிழ்த் திரைப்படத் தயாரிப்புத் தொடர்பாக தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்டித்தும், அவற்றை மாற்றக் கோரியும் திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலன சித்திரம்" அமைப்பு , 2000ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு வந்தது.

மக்களிடையே தரமான சினிமா இரசனையை உருவாக்கும் பொருட்டு யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டம், யாழ்.நூலக வாசகர் வட்டம் போன்ற அமைப்புகள் நல்ல சினிமாவை திரையிட்டு வந்தன. சலனசித்திரம், ஸ்கிறிப்நெற் போன்ற நிறுவனங்கள் திரைக் கலைப் பயிற்சி வகுப்புகளை நடத்தி திரைக் கலை தொடர்பான விழிப்புணர்வை கலைஞர்களிடையே ஏற்படுத்தியதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவற்றின் வெளிப்பாடாக ஈழத்தில் தமிழில் முழுநீளத் திரைப் படங்களும் குறும்படங்களும் வெளிவருகின்றமையையும் பல அமைப்புக்களும் குழுக்களும் திரைப்படத் தயாரிப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமையையும் நோக்கலாம்.

அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் 11ஆம்திகதி வரை 'பட்டறை' அமைப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து சிறப்பு திரைப்படப் பயிற்சிப் பட்டறை ஒன்றை கைலாசபதி கலையரங்கில் நடத்தவுள்ளது. அதற்கு பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளமையை அறிய முடிகின்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையும் திரைப்படத் தொழில்நுட்பத்தை அறியவிளைவோர்க்கு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**கலைக்குப் பேதங்கள் இல்லை**

நல்ல திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டுமானால் நல்ல திரைப்படங்களைப் பற்றிய உணர்வு மக்களிடையே வளரவேண்டும். இவற்றுக்குத் திரைக்கலை சங்கங்களின் தோற்றம் இன்றியமையாதது. அவை திரைப்படம் பற்றிய கலந்துரையாடல்களை அங்கத்தவர்களிடையே நடத்த வேண்டும்.

இவ்வேளையில், திரைப்படத் தொழிற் கலைஞர்கள் அனைவரும் இன, மத, மொழி, பிரதேச பேதங்களை கடந்து ஒன்றிணைந்து கலைத்துறையில் இனவாத ஜனநாயக விரோத சட்டங்களையும் செயற்பாடுகளையும் தோற்கடித்துகலை மற்றும் கலைஞரின் சுதந்திரத்தை நிலைநாட்ட எழுச்சிகொள்ளவேண்டும்.

"இலங்கைத் தமிழ்சினிமா தனது தற்போதைய சூழ்நிலையின் ஊடாக உலகத் தரம் வாய்ந்த பல அசாத்தியமான படங்களைத் தரமுடியும் என்று நான் திடமாக நம்புகின்றேன்" என்று இயக்குநர் பாலு மகேந்திரா ஒருமுறை கூறியிருந்தார். அவர் கூற்றை நியமாக்க உலக சினமா 125ஆவது வயதைப் பூர்த்தி செய்கின்ற இந்தத் தினத்தில் இலங்கைத் திரைக் கலைஞர்கள் பிரக்ஞை கொள்ள வேண்டும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஏனிந்த இழுத்து மூடல்?

யாழ்.சர்வதேச விமான நிலையத்தை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இரண்டு வாரங்கள் மூடியுள்ளது அரசு. காரணம்? வேறென்ன, அதே கொரோனா தொற்று ஏற்படும் என்ற அச்சத்தில் தானாம். இலங்கையில் உள்ள ஏனைய விமான நிலையங்களையெல்லாம் விட்டு விட்டு, யாழ். சர்வதேச விமான நிலையத்தை மட்டும் அரசு விழுந்தடித்துக் கொண்டு மூடியமைக்கான காரணம் பலருக்கும் புரியவேயில்லை.

இத்தனைக்கும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வந்தவர்களில் எவருமே கொரோனா தொற்றுக்கு இலக்கானவர்களாக இனங்காணப்படவுமில்லை. அத்துடன் இந்தியாவுக்கு மட்டுமே யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடான சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையைப் போலவே இந்தியாவும் மிகக் குறைந்தளவானோரையே கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவர்களாக அடையாளம் கண்டு, அவர்களைச் சிகிச்சைக்கு உட்படுத்தி வருகின்றது. ஒருவேளை கொரோனா உச்சம் பெற்றுள்ள இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கான விமான சேவைகள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினூடாக நடைபெற்றிருந்தால் கூட அரசு அதனை இழுத்து மூடியதில் ஒரு நியாயம் இருந்திருக்கும். ஆனால், மிகக் குறைந்த வருமானத்துடன் இயங்கிக் கொண்டிருக்கின்ற தமிழர் பகுதியில் உள்ள விமான நிலையத்தை கொரோனாவைச் சாட்டாக வைத்து அரசு மூடியுள்ளதோ என்ற சந்தேகம் தோன்றுகின்றது. கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமே அதனை விரைவாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று நேற்றுக் கூறியிருந்தோம். ஆனால் , எந்தக் காரண காரியமும் இல்லாமல் வெறுமனே கொரோனா என்ற லேபிளை ஒட்டிக் கொண்டு தங்கள் வக்கிரங்களையெல்லாம், எந்தச் சந்தடியுமில்லாமல் நிகழ்த்த அரசு முனைவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளையும், பல்கலைக்கழகங்களையும், திரையரங்குகளையும் மூடும் போது , தமிழர் பகுதிகளில் உள்ள பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும்,திரையரங்குகளும் மூடப்பட்டன. அதில் நியாயமிருந்தது. எல்லா இடமும் ஒரு பொதுவான கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் இலங்கையின் பிரதான கொரோனா நுழைவாயிலான பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வழமை போல இயங்க அனுமதி கொடுத்து விட்டு, தமிழர் பகுதியில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மட்டும் கொரோனா அச்சம் காரணமாக மூடினார்கள் என்பதை எந்த முட்டாளும் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஒருவேளை, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் கொரோனாவைக் கண்டு பிடிக்கக் கூடிய கருவிகளோ, மருத்துவக் கட்டமைப்புப் பொறிமுறைகளோ இல்லாதிருக்கக் கூடும். அப்படியில்லாவிட்டால் ,அவற்றைத் தருவித்து அங்கு நிறுவுவதற்குத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இப்படி இழுத்து மூடுவது முறையல்ல.

# பொருள்கள் கொள்வனவுக்கு வவுனியாவில் முண்டியடிப்பு

## பொருள்களுக்கு தட்டுப்பாடே இல்லை என்று கூறுகின்றது வர்த்தக சங்கம்

**வவுனியா, மார்ச் 16**

**‘கொரோனா’ வைரஸ் தொற்று காரணமாக, வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் முண்டியடித்து பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இந்தப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று கருதியே இவ்வாறு கொள்வனவு செய்கின்றோம் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனினும், இத்தகைய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்று அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

அத்தியாவசியப் பொருள்கள், மருந்து வகைகள், அரிசி வகைகள் மற்றும் ஏனைய பொருள்கள் போன்றவை அதிகளவில் விற்பனையாகின்றன.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா வர்த்தக சங்க செயலாளர் ஆறுமுகம் அம்பிகைபாலன் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் கொழும்பில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் வவுனியாவுக்கு பொருள்களைக் கொண்டு வருவதும் வவுனியாவிலிருந்து பொருள்களைக் கொண்டுசெல்வதும் எந்த தங்குதடையுமின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

சில நாள்களாக பொதுமக்கள் வழமைக்கு மாறாக அளவுக்கதிகமான பொருள்களை கொள்முதல் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதனால் வர்த்தகர்கள் இரவிலும் தங்கள் வர்த்தக நிலையங்களை நீண்டநேரம் திறந்து அவர்களுக்கான சேவைகளை வழங்கி வருகிறார்கள். பொதுமக்கள் திடீரென அளவுக்கதிகமான பொருள்களைக் கொள்முதல் செய்வதனால் வர்த்தக நிலையங்களில் ஏற்கனவே இருக்கும் கையிருப்புக்களை விட மேலதிகமான பொருள்கள் தேவைப்படுகின்றன. இதன் மூலம் வர்த்தகர்கள் சில நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றார்கள். இது ஒரு சில நாள்களில் நிவர்த்தி செய்யப்பட்டுவிடும். ஆகையால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

பொதுமக்களுக்கு தொடர்ந்தும் சிறந்த முறையில் பொருள்களை விநியோகிப்பதற்கு வவுனியா வர்த்தகர்கள் அக்கறையுடனும் பொறுப்புடனும் செயற்படுவார்கள் என்று மேலும் தெரிவித்தார். (த-18)

# இருப்பை உறுதி செய்தால் இலக்கை அடையமுடியும்

## கூறுகின்றார் அங்கஜன்

மருதங்கேணி, மார்ச் 16

தமிழ்த் தேசியத்தின் இருப்பை உறுதி செய்பவர்கள் தான் தமிழ்த் தேசியத்தின் இலக்கை அடைய முடியும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிருகத்துக்கும் மனிதருக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால், பலர் பலவிதமாகச் சொல்வார்கள். ஆனால் மிருகங்கள் உணவுக்காகப் போராடும், மனிதன் உணவு உண்ட பின்பே போராடுவான். நீங்கள் யோசித்துப் பாருங்கள் இரண்டு நாள் சாப்பிடவில்லை என்றால் நீங்கள் சாப்பாடு பற்றி யோசிப்பீர்களா? போராட்டத்தைப் பற்றி யோசிப்பீர்களா? அதிகம் சராசரி மக்களுக்குச் சாப்பாடு பற்றித்தான் யோசனைவரும். எமது இருப்பைப் பற்றியே சொல்கிறேன். எங்களுடைய இருப்பை உறுதி செய்வதுதான் எமது இலக்கை அடைவதற்கான முதற்கட்ட பணி - என்றார். (த-160)

### கொடிகாமத்தில்

# சுற்றிவளைப்பில் 8 பேர் கைதாகினர்

கொடிகாமம், மார்ச் 16

கொடிகாமம் கெற்பேலி மற்றும் பாலாவி பகுதியில் பொலிஸாரும் விஷேட அதிரடிப்படையினரும் இணைந்து சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியுள்ளனர்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 8 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஒருவரும், கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் மற்றொருவரும், கசிப்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையில் உள்ளனர். இன்னும் பலர் கைது செய்யப்படவேண்டியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலாவி பகுதியில் ஈட்டியால் குற்றி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபர்களைக் கடந்தவாரம் கைது செய்ய சென்றவேளை கொடிகாமம் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை சேதப்படுத்தி பொலிஸாரைத் தாக்கிவிட்டு சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களையும் கைது செய்வதற்காகவே நேற்றுமுன்தினம் அதிகாலை நான்கு மணிக்கு 14 ‘ஜீப்’பில் சென்ற கொடிகாமம் பொலிஸாரும் விஷேட அதிரடிப் படையினரும் இணைந்து எட்டுப் பேரை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

### யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அருகில்

# ரூ.55 லட்சம் செலவில் வடிகால்,மதகு அமைப்பு

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில், மாரிகாலத்தில் தேங்கும் அதிக நீரை வெளியேற்றும் முகமாக, மாநகர சபையால் 55 லட்சம் ரூபா செலவில் வடிகால் மற்றும் மதகு அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாநகர சபையின் பொது நிதியில் இருந்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 3 மாதகாலமாக வாய்க்கால் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. வீதியின் எதிர்த் திசையில் தேங்கும் வெள்ள நீரைக் கடத்துவதற்கு ஏதுவாக வீதியின் குறுக்கே குழாய் பொருத்தப்பட்டு பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. (க-105)

> **“எமது நாடான இலங்கை பெற்றுக்கொண்ட வெற்றிதானென்ன? நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையைக் கோரும் அரசு, அந்த அதிகாரத்தின் மூலம், தான் என்ன நன்மையை நாட்டுக்கு ஈட்டித் தரவிருப்பதாக இந்த நாட்டு மக்களுக்குத் தெளிவு படுத்தியாக வேண்டும்.”**

# படுபாதாளத்தை நோக்கி இலங்கைப் பொருளாதாரம்


சிங்கள மொழி மூலம் சாவிந்த வத்தேகெதர (மவ்பிம) தமிழில் **வீ.எஸ்.ரி**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுப் பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதை அடுத்து, நாட்டின் அரசியல் கட்சிகளும் மற்றும் தேர்தல் களத்தில் இறங்க முனையும் தரப்பும் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றன. இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை முக்கிய கட்சிகள் தேர்தலில் தனித்துப் போட்டியிடாமல், ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடவுள்ளன. அரசியல் கூட்டு என்பது நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான எத்தனமே. அரசொன்றை நிறுவ சாதாரண பெரும்பான்மை போதுமானது. நல்லாட்சி அரசு அரசமைப்பை வலுவற்றதாக்கி நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையைப் பலவீனப்படுத்தியுள்ளது. அரசமைப்பு விதிகளில் தேவையான மாற்றத்தை மேற்கொண்டு நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை அதிகாரங்களை மீண்டும் ஸ்திரப்படுத்த வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மை அவசியமாகிறது. அத்தகைய பெரும்பான்மையை ஈட்டிக் கொள்வது அத்துணை இலேசான தொன்றல்ல. விருப்பு வாக்கு தேர்தல் முறை இதற்குப் பெரும் சவாலாக ஆகியுள்ள்து. இத்தகைய அரசியல் போட்டியால் நாட்டின் பொருளாதாரச் சிக்கல் நிலை மேலும் பின்னடைவைச் சந்திக்குமானால், நாடு பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை எதிர்நோக்கும் அபாயம் கண்முன்னால் தென்படுகிறது.

**பொருளாதாரத்தில் அதிருப்தி நிலை**

நாட்டின் பொருளாதார நிலை கவலைக்கு உரியதொன்றாக ஆக நேர்ந்துள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வருமானம் பெரிய அளவில் வீழ்ச்சி கண்டு வருகிறது. உலகப் பொருளாதார சுபாவ நிலை மற்றும் நாட்டின் தேசிய உற்பத்தித்துறை எதிர்நோக்கும் சிக்கல்களே இதற்குக் காரணமாகியுள்ளன. ஜனாதிபதி கோத்தாபய நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தப் பல்வேறு திட்டங்களைக் கடைக்கொள்ள முயல்கிறார். வரிகளைக் குறைத்தல், வற்வரி குறைப்பு, நாட்டைக் கட்டியெழுப்பும் வரி முழுமையாக நீக்கம், உழைக்கும்போதே வரிசெலுத்தும் கட்டணத் தொகையை மட்டுப்படுத்தல் என்பவை அவற்றில் சிலவாகும். அதேவேளை உற்பத்தி மற்றும் வர்த்தகத் துறைகளுக்குப் பல்வேறு சாதகமான சலுகைகள் பல அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் திறைசேரிக்கு வருடமொன்றுக்கு 560 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படும் இதற்குச் சமமான விதத்தில், இந்த நட்டத்தை ஈடுகட்ட அரசு தனது செலவீனங்களைக் குறைத்தாக வேண்டியுள்ளது. அத்தகைய நடைமுறை எதனையும் இன்று அவதானிக்க முடியவில்லை. அரசு புதிதாக 45 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கியுள்ளது. அது மட்டுமன்றிப் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்க அரசு கோடிக்கணக்கான ரூபாக்கள் பணத்தைச் செலவிட நேர்ந்துள்ளது. இந்த நிலையில் நாட்டு மக்களது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதில் அரசு பெரும் சிரமத்தை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. நாட்டின் வறட்சி நிலை காரணமாக பெருமளவான மக்களுக்குத் தண்ணீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டி நேர்ந்துள்ளது. தேவையான அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய இயலாத நிலையில் தனியார் தரப்புக்களிடமிருந்து அதனைக் கொள்வனவு செய்ய நேர்ந்துள்ளது. இதனால் நாட்டில் பணவீக்கம் ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

இந்த நிதியாண்டில் நூற்றுக்கு நான்கு விகித பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது சாதகமான தொன்றாக அமையப் போவதில்லை. அரச நிறுவனங்களின் தீர்மானம் மேற்கொள்ளும் வாய்ப்பு பொதுத் தேர்தல் காரணமாகக் குழம்பிப் போயுள்ளது. தனியார் துறைகளது செயற்பாடுகளும் இறங்கு முகம் கண்டுள்ளன. வெளிநாட்டு முதலீடுகள் கூட எதிர்பார்த்த அளவுக்குச் சாதகமான பலன் தருவதாகத் தோன்றவில்லை. புதிய அரசின் கொள்கை நிலைப்பாடுகள் தெரிவுவரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகள் மேற்கொள்வதைத் தவிர்த்து வருகின்றனர். அந்த வகையில் இந்த நிதியாண்டில் பொருளாதார முன்னேற்றத்தை நாடு எதிர்பார்க்க இயலாத நிலை உருவாகியுள்ளது.





**சர்வதேசச் சவால்**

உலகின் முன்னணி மருந்துப் பொருள்கள் உற்பத்தி நாடான இந்தியா, வலிநிவாரணி மருந்தான பரிசித்தமோல்ற் ஏற்றுமதியை நிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்துள்ளது. குறித்த மருந்துக்கான மூலப் பொருளை விநியோகிக்கும் சீன நாடு கொரோனா வைரஸ் தொற்றுச் சவால் காரணமாக தனது ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளும்போது அது உலக பொருளாதாரத்தில் தளம்பலை ஏற்படுத்தக் காரணமாகிறது. கொரோனா வைரஸ் தொற்று உலகின் ஏனைய நாடுகளுக்கும் பரவி வருவதால் உலகளாவிய ரீதியில் பொருளாதார சமூக நிலைகளில் தளம்பல் ஏற்படுகின்றது. சீனா, இத்தாலி, தென் கொரியா, ஆகிய நாடுகளில் தொழிற்சாலைகள் தத்தம் உற்பத்தி நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டுள்ளன. உலக வர்த்தக சந்தைக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்துமொன்றாக ஆகியுள்ளது. இத்தகைய நிலையால் உலக பொருளாதார வளர்ச்சி நூற்றுக்கு ஒரு வீதம் அளவுக்கு வீழ்ச்சி காணும் என பொருளாதார நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

**கனவு உலகத்தில் இலங்கை அரசு**

சர்வதேச பொருளாதாரச் சிக்கல் இவ்விதம் பூதாகாரமாக அச்சுறுத்தி வரும் நிலையில், எமது நாட்டவர்களுக்கு அதன் பயங்கரத் தன்மை கொஞ்சம் கூடப் புரிவதாகத் தெரியவில்லை. நாட்டில் இன்று அரசியல் மோதல்கள் உச்சமடைந்துள்ளன. நாட்டையும் நாட்டு மக்களையும் எவ்வாறு காப்பாற்றுவது? அதிலிருந்து விடுபட என்ன நடவடிக்கையை மேற்கொள்ளலாம்? எனச் சிந்திக்க வேண்டிய எமது அரசியல் தலைவர்கள், பொதுத் தேர்தலில் எவ்வாறு வெற்றியடைவது என்பது குறித்தே அக்கறை செலுத்தி வருகின்றனர்.

அரசியல் தலைமைகள் விமர்சனங்களுக்கு உள்ளாவதுடன் தலைமைகளது குணவியல்புகளும் நடத்தைகளும் சவால்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது. இலங்கையின் அரசியல் களமும் கூட இதற்கு விதிவிலக்கல்ல எனத் தோன்றுகிறது. பாரம்பரியம்மிக்க கட்சிகள் செயலிழந்து போயுள்ளதுடன், புதுப்புதுக் கூட்டணிகளை உருவாக்கி அதன் மூலம் பாரம்பரிய கட்சிகளைத் தூக்கி நிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் முஸ்லீம் கட்சிகள் தனித்தனியாகக் கூட்டணிகளை உருவாக்கும் அதே வேளை, பெரும்பான்மை சிங்கள மக்களது பாரம்பரியக் கட்சிகள் வெவ்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புக்களை உள்ளடக்கி கூட்டணிகளை உருவாக்கி வருகின்றன. புதிய மாற்றங்களாயினும் அவை பழைய அடிப்படைகளே எனக் கொள்ள இயலும். இத்தரப்புக்களில் எதுவும்நிலவும்சவால்களுக்குஎவ்விதம்முகம் கொடுப்பது என்பது குறித்து சிந்திப்பதாகத் தோன்றவில்லை. இந்த நிலையில் இந்த நாட்டின் எதிர்காலம் பயங்கர நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது.

**ஏமாற்றுத்தனச் செயற்பாடுகள்**

இந்த நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னரான கடந்த 70 ஆண்டுகளில் தொடர்ச்சியாக பின்னடைவை நோக்கியே பயணித்துள்ளது. அது தவறல்ல இந்த நாட்டு மக்களை அரசியல்வாதிகளே இவ்வித பின்னடைவுப் பயணப் பாதையில் நாட்டை இட்டுச் சென்றுள்ளனர். உலகின் எத்தனையோ நாடுகள் குறிப்பாக ஜப்பான், இந்தியா, சீனா, சிங்கப்பூர், வியட்நாம், பங்களாதேஷ் போன்ற நாடுகள் பல்வேறுபட்ட பாதிப்புக்களால் கடந்த காலங்களில் கீழ் நிலையுற்றி ருந்தும், இன்று உலகின் பலமிக்க நாடுகளாக வளர்ச்சி கண்டுள்ளன. ஆனால் எமது நாடான இலங்கை பெற்றுக்கொண்ட வெற்றிதானென்ன? நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையைக் கோரும் அரசு. அந்த அதிகாரத்தின் மூலம் தான் என்ன நன்மையை நாட்டுக்கு ஈட்டித் தரவிருப்பதாக இந்த நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தியாக வேண்டும்.



# நம்பிக்கை நிதியத்துக்கு மாதாந்தம் நூறு ரூபா

## ஓய்வூதியர்கள் சம்மதம்

சாவகச்சேரி, மார்ச் 16

பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்துக்கு மாதாந்தம் சந்தாவாக 100 ரூபாவைச் செலுத்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதியத்தின் தென்மராட்சிக் கிளையின் வருடாந்தப் பொது கூட்டத்தில் ஓய்வூதியர்களால் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

அதற்கான இதுவரை காலமும் ஓய்வூதியர்களின் மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து 50 ரூபா சந்தாவாக அறவிடப்பட்டு வந்தது. தாய்ச் சங்கத்தால் ஓய்வூதியர்களுக்கு வழங்கும் நன்மைகளை அதிகரித்து சந்தாவை அதிகரிக்க எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றவுள்ள நிலையில், சந்தா அதிகரிப்புக்கு சம்மதம் கோரியிருந்தனர். இதற்கு தென்மராட்சிக் கிளையின் உறுப்பினர்கள் படிவங்களில் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அங்கத்தவர் ஒருவர் மரணமடையும் வேளையில் ஓய்வூதியரது அங்கத்துவக் காலத்தைக் கருத்தில் கொண்டு ரூபா 3 ஆயிரம் ரூபா தொடக்கம் 30 ஆயிரம் ரூபா வரை அங்கத்தவரின் உறவினருக்கு வழங்குவது. அங்கத்தவர் நோய்வாய்ப்படின் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலத்தில் மூன்று நாள்கள் தொடக்கம் 17 நாள்கள் வரை 9 ஆயிரம் ரூபா தொடக்கம் 12 ஆயிரத்து 750 ரூபா வரையும், கண்வில்லை பொருத்துவதற்கு ஒரு கண்ணுக்கு 6 ஆயிரம் ரூபா வீதம் 12 ஆயிரம் ரூபாவும், சத்திர சிகிச்சைகளுக்கு 17 ஆயிரத்து 500 ரூபாவும், அங்கத்தவர்கள் கணவர்/மனைவி மரணமடைந்தால் 7 ஆயிரம் ரூபாவும், அங்கத்தவரின் இரு பிள்ளைகளுக்குப் பல்கலைக்கழகப் புலமைப் பரிசில் கொடுப்பனவாக தலா 6 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதியத்தின் அங்கத்தவர்களது விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள, தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பிரதி மாதங்களில் முதலாவது மற்றும், மூன்றாவது திங்கட்கிழமைகளில் கிளைச்சங்க நிர்வாகிகள் சமூகமளித்திருப்பர். கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களைப் பெற்று விண்ணப்பித்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டது. (க-9)

# தாமாகவே தனிமைப்படுத்தி கொரோனாவை வெல்லலாம்

## வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டு

**கொரோனா தொற்றால் அதிகளவு உயிரிழப்புக்கள் பதிவாகக் கூடிய பாரதூரமான நிலைமை இலங்கையில் ஏற்படவில்லை. வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பவர்கள் தாமாகவே தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்வதோடு, ஏனையோரும் சுகாதார பழக்க வழக்கங்களை முறையாகக் கடைபிடித்தால் 3, 4 வாரங்களுக்குள் நிலைமையை கட்டுப்படுத்த முடியும்.**

இவ்வாறு தேசிய புத்தி ஜீவிகள் அமைப்பின் செயலாளர், சிறப்பு வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார். தேசிய புத்தி ஜீவிகள் அமைப்பின் தலைமை அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதாகும். எனினும் நீர், மின்சாரம், குடிநீர், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை விடுத்து ஏனைய நிறுவனங்கள் என்பவற்றை இரு வாரங்களுக்கு மூடுவதன் மூலம் விரைவான நன்மை பெற முடியும்.

இதனையே பிரான்ஸ் முன்னெடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் நலமாக உள்ள உடலில் உருவாகாது. ஆனால் தொற்றுக்குள்ளாகியுள்ள ஒருவரிமிருந்து பிரிதொருவருக்கு மிக இலகுவாகப் பரவக் கூடியது.

எனவே தற்போதைய நிலைமையில் சாதாரண இருமல், காய்ச்சல் காணப்படுபவர்களிடமிருந்து ஏனையோர் விலகியிருப்பதே சிறந்ததாகும்.-என்றார். (எ)



# பூந்தோட்டமானது வெற்றுக் காணி!

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு முன்பாக உள்ள காணியை, அருகில் உள்ள வர்த்தக நிலையத்தினர் பூந்தோட்டமாக மாற்றியுள்ளனர்.

மருத்துவமனைக்கு முன்பாக காணப்பட்ட வெற்று நிலத்தை பூந்தோட்டமாக மாற்றுவதற்கு, நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தினர் முன்வந்தனர்.

கடந்த வருடம் கோடை காலத்தில் நீருக்குத் தட்டுப்பாடு நிலவியதால் வர்த்தகர்கள் மரக்கன்றுகள் வைத்துப் பராமரித்த போதிலும், நீர் பற்றாக்குறை காரணமாக தமது முயற்சியைக் கைவிட்டனர். மருத்துவமனைக்கு அருகில் உள்ள உணவகத்தினர் தமது கிணற்றிலிருந்து ஊழியர்கள் மூலம், பூங்கன்றுகளுக்கு நீர்பாய்ச்சித் தற்போது அந்த இடத்தைப் பூந்தோட்டமாக மாற்றியுள்ளனர். (க-9)

# கிலன்தோட்ட இணைப்பு வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

கொழும்புத்துறை நெடுங்குளம் மற்றும் கிலன்தோட்ட இணைப்பு வீதி நீண்ட காலத்தின் பின்னர் தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. சுமார் 740 மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதி கிரவல் வீதியாகக் காணப்பட்டது. கம்பெரலியா வேலைத்திட்டத்தின் கீழ், இந்த வீதி சுமார் 4 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. 350 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்தப் பகுதியில் இந்தவீதி தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர் என்று மாநகர பிரதி முதல்வர். து.ஈசன் தெரிவித்தார்.

வீதிப் புனரமைப்பு மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன. இன்னும் 50 மீற்றர் நீளம் கொண்ட பகுதி புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. புனரமைக்கப்படாத பகுதி விரைவில் புனரமைக்கப்பட்டு நிறைவுறுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-17)

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை


யாழ்ப்பாணம், மார்ச் 16


குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளமையால், அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் ஆலயங்கள், பொதுச்சந்தைகள், வீதிகள் உட்படப் பொது இடங்களில் அலைந்து திரியும் நாய்களால் மக்கள் நடமாட அஞ்சுகின்றனர்.

இது தொடர்பில், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு சென்றதை அடுத்து, கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட வைத்தியர்கள், தெரு நாய்களைப் பிடித்துக் கருத்தடை சிகிச்சை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

இதே போன்று ஏனைய பிரதேசங்களிலும் நடமாடும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (க-115)





கொழும்புத்துறை உப்புக்குளம் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் ஆரோகணித்து வீதிவலம் வந்தார். (க-17)

# சிறுபான்மையினர் வாழும் இடங்களே அரசின் இலக்கு

## கொரோனா பற்றி சாள்ஸ் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 16

“சிறுபான்மை மக்கள் வாழும் பிரதேசங்களை இலக்குவைத்து ‘கொரோனா’ நோய் சந்தேகநபர்களை தங்க வைப்பது தமிழ் பேசும் மக்களிடையே அச்சத்துக்கும் அப்பால் சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது” என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தற்போது ‘கொரோனா’ தாக்கம் காணப்படும் நாடுகளி லிருந்து வருவோரை தங்க வைப்பதற்கான இடைத் தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 14 நாள்கள் பராம ரித்து வீடுசெல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அரசு, இடைத் தங்கல் முகாம்களை தமிழர் பிரதேசத்தில் அமைத்து தமிழ் மக்களை தொடர்ந்தும் அச்சத்தில் வைத்திருக்கவே விரும்பு கின்றது. படையினர் தமது பாவனைக்கு அல்லது தேவைக்கு மிஞ்சிய பிரதேசங்களைக் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். இறுதிப் போரின்போது படையினரிடம் சரணடைந்த எமது மக்களை நகரிலிருந்து 30 கிலோமீற்றர் தொலை விலுள்ள செட்டிகுளத்தில் தங்கவைத்த அரசு, இன்று கொடிய நோய் உண்டா எனக் கண்டறிவதற்கு நகரின் மத்தியில் இறக்குகின்றது.

இதுதான் அரசு தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள அக்க றையின் வெளிப்பாடு. இந்த அரசுடன் ஒட்டித் தொங்கும் தமிழ்க் கட்சிகள் எதனைக் கூறிஇதை நியாயப்படுத்த செய்யமுடியும். இவ்வாறான செயலின் மூலம் இந்தப் பகுதியில் சிறு இடர் ஏற்பட்டாலும் அரசு பதில் கூறும் என்ற நம்பிக்கை எமக்குக் கிடையாது. இதற்கு அரசைக் காப்பாற்றி அதனோடு ஒட்டியுள்ளவர்களே இந்த மக்க ளுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். இதனையும் சர்வ தேசம் அவதானித்துக் கொண்டு தான் உள்ளது என்பதனை இவர்களெல்லோரும் மறந்து விட்டனர். - என்றார். (த-105)

## சமத்துவம் காப்போம்

ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியது கடவுள் அல்ல, மனித சமூகமே. மனிதனே சமூக பொரு ளாதார, அரசியல் ரீதியாக பாகுபாடுகளை வகுத்து, அதிகார நிலைகளைக் கடைப்பிடித்து வருகின்றான்.




இதனை நிலை நிறுத்து வதில் அன்று முதல் இன் றுவரை மனிதர்கள் குறி யாக இருக்கிறார்கள். சமத் துவத்துவத்தை இயற்கை யாகவே கடவுள் மனிதபடைப் புக்களுக்குள் இணைத்து வைத்துள்ளார்.

நாம் அனைவரும் இறைவ னின் பிள்ளைகள், சகோதர சகோதரிகள் என்பது இறைவன் வகுத்த சித்தாந்தம். ஆகவே எம்மத் தியில் புரையோடிப் போயுள்ள ஏற்றத்தாழ்வு களை உருவாக்கிய நாமே, அவற்றைக் களைய முயற்சிக்க வேண்டும். சமூக அமைப்பைச் சமத் துவ அமைப்பாக மாற்றியமைக்க வேண்டும். இது தனிநபரின் கடமை மட்டுமன்று, சமூகத்தில் உள்ள அனைவரின் கடமையாகும்.

ஒருவேளை உணவுக்கு என்ன செய்வோம் என்று பலர் தவிக்க, மூக்கு முட்ட உணவுருந்தி செரிமா னத்துக்கு என்ன செய்யலாம் என்று யோசிக்கும் நிலைமாறி பகிர்ந்துண்ணும் மன நிலையை வளர்ப்போம். பசியால் வாடிய ஏழை லாசருக்கு உணவு வழங்க அந்தச் செல்வந்தன் தவறிவிட் டான். அதனால் விண்ணக வாழ்வை இழந்து எரிநரகில் தள்ளப்பட்டான். துன்பத்தில் வாடுவோ ருக்கும், பசியால் துவள்வோருக்கும், அடிமை யாய் வாழ்வோருக்கும் உதவ முன்வருவோம். இதுவே அறநெறிக் கடமையென உணர்வோம்.

எஸ்.யேசுதாஸ்

## ‘இஷானியா கலாமன்றம்’ புதுக்குடியிருப்பில் திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 16

கலை, இலக்கியம், தொழிற் கல்வி ஆகியவற்றை முன்னெ டுக்கும் நோக்குடன் ‘இஷானியா கலாமன்றம்’ புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை திறக்கப்பட்டது.

கலாமன்றத்தின் பெயர்ப்பலகை யைப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலககிராமநிர்வாகஉத்தியோ கத்தர் ஒளித்திலகன் திரைநீக்கம் செய்தார்.



தொடர்ந்து கலாமன்றத்தின் புதிய கட்டடத் தைப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலா ளர் எஸ்.ஜெயக்காந் திறந்து வைத்தார். தொடர்ந்து இஷானியா கலாமன்றத்தின் பணிகளைநெறிப்படுத்திய மாற்றுத்திறனாளி இ.பிர பாகரன், நினைவுச் சின் னம் வழங்கி மதிப்பளிக் கப்பட்டார்.

இஷானியா கலாமன்றத் தொடக்குநர் கமலராஜா அதனை வழங்கினார். தொடர்ந்து கலாமன்றத் தின் பணிகளைப் புதுக்குடி யி ருப்புப் பிரதேச செயலா ளர் எஸ்.ஜெயக்காந் ஆரம்பித்தார். (கு159)

## பொலிஸ் நிலையங்களுக்கு பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியப் பிரிவு க்குட் பட்ட பொலிஸாருக்கு விளையாட்டு உபகரணங் கள், தொலைக்காட்சிப் பெட்டி, சோபா செட்கள் என்பவை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டுள் ளன. 2019 ஆம் ஆண்டு பொலிஸ் பிராந்தியங்க ளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அலுவலகத் தில் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தி யட்சகர் சி. டபிள்யு. சேனாதிர தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிராந்தியங்களுக்கு ஒதுக்கப்பட்ட இரு பது லட்ச ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியிலிருந்து பிராந்தியத்துக்குட்பட்ட எட்டு பொலிஸ் நிலையங்க ளுக்கும் இவை வழங்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-26)



## தண்டம் விதிக்கின்றபோதும் திருந்தாத பல உணவகங்கள்

மானிப்பாய், மார்ச் 16

யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியில் குறிப்பிட்ட அளவான உணவு கையாளும் நிலையங்கள் சுகா தார சீர்கேடுகளு டனேயே நாளாந்தம் இயங்கி வருகின்றன என்று பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்த இரு மாதங்களில் மட்டும் இரண்டு பேக்கரிகள் உட்பட 15 க்கும் மேற்பட்ட உணவகங்கள் மீது நீதிமன்றம் தண்டம் விதித்தி ருந்தது. எனினும், உணவக நடத்துநர்கள் திருந்து வதாக இல்லை. சில வாரங்களின் பின்னர் அல்லது சில நாள்களின் பின்னர் உணவகங்கள் மீண்டும் சுகாதார சீர்கேடுகளுடனேயே இயங்குகின்றன என் றும் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்ற னர். தண்டம் விதிக்கப்படும் பணத் தொகையை அதிகரித்தால்தான் திருந்துவீர்களா என்றும் அத்த கைய உணவக நடத்துநர்களிடம் பாவனையாளர் கள் கேள்வியெழுப்புகின்றனர். இதேவேளை, அரியாலையிலுள்ள ஓர் உணவகம் சுகாதார விதிமு றைகளுக்கு முரணாக இயங்குகின்றது என்று மாந கர சுகாதாரப் பரிசோதகர் பு. ஆறுமுகதாசன் உண வக உரிமையாளருக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக் கள் சுமத்தி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தி ருந்தார். உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற் றுக்கொண்டதையடுத்து, அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான், மறு அறிவித்தல் வரை உணவகத்தை மூடுமாறு உத்தரவிட்டுள்ளார். ன

மற்றொரு வழக்கில், திகதி காலாவதியான பொருள் களை விற்பனைக்கு வைத்திருந்த கடை உரிமை யாளருக்கு நீதிவான் 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (க-115)

## பாடசாலை உணவகத்துக்கு சீல்

சாவகச்சேரி, மார்ச் 16

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன் றின் சிற்றுண்டிச்சாலை நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சீல் வைக்கப்பட்டது. மாணவர்களுக்குச் சத்தான மற் றும் தரமான உணவுப் பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று சாவகச்சேரி சுகா தார மருத்துவ அதிகாரி விடுத்த பணிப்புக்கமைய, சுகாதாரப் பகுதியினர் கடந்த வாரம் பாடசாலைக ளின் சிற்றுண்டி நிலையங்களைத் திடீர் பரிசோத னைகளுக்கு உட்படுத்தினர்.

அதன்போது, சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகள் கைப் பற்றப்பட்டன.

சிற்றுண்டி நிலையம் நடத்தியவருக்கு எதிராக அன் றைய தினமே சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, உரிமையாளர் குற்றத்தை ஒப் புக் கொண்டதையடுத்து 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட சிற்றுண்டிகளை அழிக்குமாறும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சுட்டிக் காட்டப் படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை சிற் றுண்டி நிலையத்தை மூடுமாறும் நீதிவான் உத்த ரவிட்டார். (க-9)

# வவுனியாவில் தடுப்பு முகாம் இனவாதத்தின் வெளிப்பாடு!

## சாடுகின்றார் செல்வம்

வவுனியா, மார்ச் 16

வவுனியாவில் மக்கள் வாழும் பிரதேசத்தை அண்டி கொரோனா தொற்று தொடர்பான தடுப்பு முகாம் அமைக்கும் செயற்பாடு இனவாதத்தின் வெளிப்பாடு என முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

அண்மைக்காலமாக உலகை ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. இவ் உயிர்கொல்லி வைரஸிலிருந்து மக்களை காப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமே.

எனினும் இலங்கை அரசு வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளிடம் கொரோனா வைரஸ் தொற்று உள்ளதா என்பதைப் பரிசோதிக்கும் தடுப்பு முகாமை வடக்கு கிழக்கை மையப்படுத்திஅமைப்பதானதுபெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

கடந்த வருடம் இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குதல் நடந்த பின்னரும் இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகளை உடனடியாக வவுனியாவுக்கே அரசு அனுப்பியது. இதற்கு வவுனியா மக்கள் எதிர்ப்பை காட்டியபோதிலும் அப்போதைய அரசாங்கம் செவிசாய்க்க வில்லை. இதேபோன்றதான மிகவும் கொடிய நோய் தொடர்பான பரிசோதனைக்காக தற்போது வவுனியாவில் தடுப்பு முகாமை அமைப்பதாகக் கிடைக்கப்பெறும் செய்திகளைப் பார்க்கும் போது, எமது மக்களை அடிமைகள் என நினைத்து அரசு செயற்படுவதற்கு ஒப்பானதாக கருதவேண்டியுள்ளது. இவ்வாறான முகாம்களை அம்பாந்தோட்டையிலோ காலியிலோ அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்? இத்தாலி, தென்கொரியா, ஈரான்நாட்டில் இருந்து வரும் பயணிகளை பரிசோதிப்பதற்கு தடுப்பு முகாம் தேவையெனில் அந்த நாடுகளிலிருந்துவரும் விமானங்களை அம்பாந்தோட்டை விமான நிலையத்திற்கு திருப்பி அங்கேயே தடுப்பு முகாமொன்றை நிறுவி பரிசோதனை செய்வதற்கான இலகுவான வழிவகை இருக்கும் போது எதற்காக வடக்கு கிழக்கை அரசாங்கம் தெரிவு செய்கின்றது என்பது இன அழிப்புக்கான மற்றுமொரு வடிவமா என எண்ணத்தோன்றுகின்றது என தெரிவித்தார். (ந-110)




## வாழ்வாதார உதவி கையளிப்பு

மன்னார், மார்ச் 16

ஜீவஊற்று அன்பின் கரத்தின் ஊடாக, மன்னார் அன்புபுரத்தைச் சேர்ந்த குடும்பத்துக்கு வாழ்வாதார உதவியாக, கோழிக்குஞ்சுகள் (கோழி தீனி, மருந்துகள் உள்ளடங்களாக) வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியை லண்டன் காக்கும் கரங்கள் அமைப்பைச் சேர்ந்த சிவா வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (க-222)

# ஏ.எஸ்.பிக்கள் 10 பேருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மீறிய, 10 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களை பொலிஸ் ஆணைக்குழு இடமாற்றம் செய்துள்ளது.

பொலிஸ் சேவையில் உள்ள 20 பேர் இடமாற்றப்படும் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், குறித்த விடயம் உடனடியாக தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.


இந்த விடயம் ஆணைக் குழுவில் ஆராயப்பட்டது. இதன் பிரகாரம் பொலிஸ் ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவர் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு, இடமாற்றத்தை நிறுத்த வேண்டும் என்ற முடிவு அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் தற்போது தேர்தல் ஆணைக்குழுவின் முடிவை மீறிய 10 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-105)

# சுகாதாரச் சீர்கேடுகள் 4 உணவகங்களுக்கு சீல்

## ரூ.90 ஆயிரம் தண்டமும் விதிக்கப்பட்டது

வலிதென்மேற்கு, மார்ச் 16



யாழ்ப்பாண நகரில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய நான்கு உணவகங்களுக்கு 90ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிமன்று மறு அறிவித்தல் வரை நான்கு உணவகங்களையும் மூடுமாறும் உத்தரவிட்டது.

கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாண மாநகர சுகாதாரத் துறையினர் யாழ்ப்பாண நகரிலுள்ள உணவகங்களையும், பழக்கடைகளையும் சோதனைக்கு உட்படுத்தினர். சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக இயங்கிய ஒரு பழக்கடை மற்றும் 4 உணவகங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

அவற்றின் நடத்துநர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. அவர்கள் தங்கள் மீதான குற்றங்களை ஏற்றுக்கொண்டனர். ஒருவருக்கு சுகாதாரச் சீர்கேட்டுக் குற்றத்துக்கு 35 ஆயிரம் ரூபாவும் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு 15 ஆயிரம் ரூபாவுமாக 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு மறு அறிவித்தல் வரை உணவகத்தை மூடுமாறும் உத்தரவிடப்பட்டது.

மற்றைய இரு உணவகங்களுக்கு எதிராக 8 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் இரு உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அவர்களில் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், மற்றையவருக்கு 30 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டு மறுஅறிவித்தல்வரை கடையை மூடுமாறும் உத்தரவிட்டது.

மற்றொருவர் மீதான வழக்கில் அவர் மன்றில் முற்படவில்லை. அவருடைய உணவகத்தை மறு அறிவித்தல் வரை மூடுமாறு உத்தரவிட்ட நீதிவான் விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

இதேபோன்று, பழக்கடை உரிமையாளரும்நீதிமன்றுக்குச் சமுகமளிக்கவில்லை. அவருக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த-115)



கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் உதவிக்கரம் செயற்றிட்டத்தின் ஊடாக அச்சுவேலி பகுதி கிராம அலுவலரின் கோரிக்கைக்கு அமைவாக, விசேட தேவையுடைய சிறுமி ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. கனடாவில் வசித்துவரும் க.ஜெயந்திரன் நிதியுதவியை வழங்கினார். (க-222)

# வவுனியாவில் இரண்டு மாதங்களில் 13 லட்சம் மீன் குஞ்சுகள் 87 குளங்களில் விடப்பட்டன

வவுனியா, மார்ச் 16



வவுனியாவில் இந்த வருடம் முதல் இரண்டு மாதங்களில் 13 லட்சத்து 32 ஆயிரத்து 500 மீன்குஞ்சுகள் குளங்களுக்குள் விடப்பட்டுள்ளன என்று தேசிய நீர் உயிரின அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி யோ.நிசாந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:


வவுனியாவில் பருவகால குளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 87 குளங்களில் மீன்குஞ்சுகள் விடப்பட்டன. சுமார் 33 லட்சம் ரூபா பெறுமதியில் மீன்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தித் திட்டங்கள்தொடர்ந்தும்முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-110)



## சேமிப்பு வங்கியின் மகளிர்தின நிகழ்வு

தேசியசேமிப்பு வங்கி, கொடிகாமம் கிளையின் மகளிர் தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை வங்கி முகாமையாளர் அ.யோகநாயகம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக இராமாவில் கிராம அலுவலர் செல்வி.சி.கஸ்தூரி கலந்துகொண்டார். இதில் மகளிர் அமைப்பின்பிரதிநிதிகள், அங்கத்தவர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் வங்கிச் செயற்பாடுகளில் சிறப்பாகச் செயற்படும் மகளிர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். 45 மகளிர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)



# மன்னாருக்குக் கடத்திய கழிவு தேயிலை மீட்பு

## முசலியைச் சேர்ந்தவர்கள் கைது

மன்னார், மார்ச் 16

மன்னாரில் உணவகங்களுக்கு விற்பனை செய்வதற்காக கொண்டு வரப்பட்ட பாவனைக்கு உதவாத கழிவு தேயிலை மூடைகள் வங்காலையில் மீட்கப்பட்டுள்ளன. இரவு கடற்படையினரும், வங்காலை பொலிஸாரும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு அதை மீட்டுள்ளனர்.

சொகுசு வாகனம் ஒன்றின் பின்இருக்கைகள் அகற்றப்பட்டு வங்காலை ஊடாக மன்னாருக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோதே அது மடக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 8 மூடைகளில் அடைக்கப்பட்ட பாவனைக்கு உதவாத 224 கிலோ கிராம் கழிவு தேயிலை மீட்கப்பட்டுள்ளது. அந்த வாகனத்தில் பயணித்த மூன்று நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மன்னார் முசலியைச் சேர்ந்தவர்கள்.

மன்னார் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணை இடம்பெறுகின்றது. விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-56)

# பிரதேச செயலக அனுமதி கடலட்டை பிடிக்க தேவை

## மாவட்டச் செயலர் அறிவிப்பு

முல்லைத்தீவு,மார்ச் 16

**மாத்தளனில் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை கடற்றொழில் அமைச்சு வழங்கினாலும், பிரதேச செயலகத்திடம் வாடி அமைப்பதற்கான அனுமதியைப் பெறாமல், வாடி அமைத்து தொழில் புரிய அனுமதி வழங்கப்படமாட்டாது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.**

மாவட்டத்துக்குள் தெற்கில் இருந்து மீனவர்கள் வருகை தந்து, தொழில் புரிவதனால் உள்ளூர் மீனவர்கள் பல இடர்ப்பாடுகளைச் சந்திக்கின்றனர்.

தமது பிரதேசத்துக்குள் கடற்றொழில் அமைச்சரின் அனுமதியுடன், உள்ளூர் அனுமதிகள் இன்றி தொழில் புரிவோரைத் தடை செய்ய வேண்டும் என்று மாத்தளன் மீனவர் அமைப்புக்கள் மாவட்டச் செயலாளர் க.விமலநாதனிடம் மனுக் கையளித்தனர். இவ்வாறு கையளிக்கப்பட்ட மனுத் தொடர்பில், மாவட்டச் செயலாளரின் ஏற்பாட்டில் மாவட்ட மீனவர் அமைப்புக்கள், மாவட்டக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் விசேடமாக ஆராயப்பட்டது. இதில் மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் மேற்படி தீர்மானத்தை மீனவர் அமைப்புக்களிடம் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் கடற்கரையோரம் உள்ள அரச நிலத்தில் வாடி அமைப்பதனால், முற்கூட்டியே பிரதேச செயலாளரிடம் அனுமதி பெறாது விடின், அது தொடர்பில் உடன் பிரதேச செயலகம் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தலாம் எனவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (க-105)

# வீதிகளை விசாலப்படுத்தி சீரமைக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 16

'ஐரோட்' திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளை மட்டுமன்றி, சபையின் அனைத்து வீதிகளையும் நான்கு மீற்றர் அகலத்துக்கு, விசாலித்துப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் க.சிவராசா கோரிக்கை விடுத்தார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது வட்டாரத்தில் வீதி வேலைகள் செய்யவேண்டுமென வலியுறுத்தி நிதி ஒதுக்கீடு செய்யும் எங்களுக்கு அதே வீதியில் இடம்பெறும் புனரமைப்புப் பணிகளை மேற்பார்வை செய்ய அதிகாரமில்லை எனக் கூறப்படுகிறது. அதே வேளை அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அங்கு காணப்படும் குறைகளைத் தெரிவிக்க அதிகாரமில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிப் புனரமைப்பு என்பது நீண்டகாலப் பயன்பாட்டுக்கான ஒன்று என்பதுடன், அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படுவதாலும், மக்கள் அதில் உள்ள குறைபாடுகளை தெரிவிக்க அனுமதிக்க வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் கிராம அலுவலர் பிரிவுக்கு ஒரு மில்லியன் ரூபா செலவிலான வேலைத்திட்டத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகளை, தற்போது எமது காலத்தில் குறைந்தது நான்கு வருட இடைவெளியில் மீண்டும் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

மக்களின் அபிப்பிராயப்படி உரிய வகையில் புனரமைத்திருந்தால் வீதிகளை மீண்டும், புனரமைக்க வேண்டிய தேவை இருந்திருக்காது.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 'ஐரோட்' திட்டத்தில் வீதிகள் புனரமைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஐ ரோட் குறைந்தது 3 மீற்றர் அகலத்துக்கு அமைப்பதால், நான்கு மீற்றர் அகலத்துக்கு வீதிகள் அமைந்திருக்க வேண்டும்.

நான்கு மீற்றர் அகலத்துக்கும் குறைவான வீதிகள் திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தால், நான்கு மீற்றர் தூரத்துக்கு குறைவான அகலம் கொண்ட வீதிகளை புனரமைப்புச் செய்யமாட்டார்கள். அதனால் 'ஐரோட்' திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளை மட்டுமன்றி, சபையின் அனைத்து வீதிகளையும் நான்கு மீற்றர் அகலத்துக்கு, விசாலித்து வைத்திருக்க நடவடிக்கையெடுக்கவேண்டும். -என்றார். (க-9)



# பரந்தனில் எரிபொருள் மீள் நிரப்பு நிலையம்

கிளிநொச்சி ,மார்ச் 16

கிளிநொச்சி - பரந்தன் சந்தியை அண்டிய பகுதியில், எரிபொருள் மீள் நிரப்பு நிலையம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர்சத்தியமூர்த்திநிகழ்வில்முதன்மைவிருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (ந-17)

### அங்கத்தவர்களாக

# இணைய அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ்ப்பாண மாவட்ட கலாசார அதிகார சபையின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். அதனை முன்னிட்டு கலாசார அதிகார சபையில் புதிதாக அங்கத்தவராக சேர விரும்பும் கலைஞர்கள் விண்ணப்பங்களை யாழ் மாவட்டச் செயலகத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று மாவட்ட கலாசார சபையின் இணைப்பாளர் இ. கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அங்கத்துவம் பெற்றுக் கொண்டுள்ள தலைஞர்கள் மாத்திரமே கலாசார அதிகார சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். குறிப்பிட்ட காலத்துக்குள் அங்கத்தவராக இணைந்து கொண்டவர்கள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப் படுத்தும் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் கலைஞர்களும் கலாசார அதிகார சபையில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-39)

# குறைந்த வருமானம் பெறும் குடும்ப விவரங்கள் சேகரிப்பு

ஏழாலை, மார்ச் 16

குறைந்த வருமானம் பெறுவோர் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஈடுபட்டுள்ளது.

ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மானிய முறையில் உணவுப் பொதி வழங்கும் திட்டத்துக்கு அமைய தரவு சேகரிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த நுகர்வுப் பொருள்களைக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள், லக் சதொச, வரையறுக்கப்பட்ட இலங்கை சந்தைப்படுத்தல் சங்கம், வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் சங்கம் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றினூடாக வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது.

குறைந்த வருமானம் பெறும் சமுர்த்தி நிவாரணம் மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறாத அங்கத்தவர்கள் மற்றும் நிரந்தர தொழிலற்ற விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், அங்கவீனமுற்றோர், விதவைகள், வருமானமற்ற முதியவர்கள், ஆகியோரை இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படுவதற்கான தகவல்களைத் திரட்டும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் ஊடாகத் தரவு சேகரிக்கப்படுகின்றது. (த-39)

# தமிழினத்தை கருவறுக்கவே வடக்கு, கிழக்கில் முகாம்கள்

## த.தே.ம.மு. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

**கொரோனோ பரிசோதனை முகாம்களை வடக்கு, கிழக்கில் அமைத்து தமிழினத்தை கருவறுக்கும் திட்டமிட்ட சதி வேலைகளையே அரசு மேற்கொள்கிறது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணண் தெரிவித்தார்.**

கொரோனோ வைரஸ் பரிசோதனை முகாம்கள் வடக்கு - கிழக்கில் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் எத்தனையோ இடங்கள் இருக்கின்ற நிலையில், அந்த இடங்களில் சிறப்பு முகாம்களை அமைத்து சிகிச்சை அளிக்க முடியும். வடக்கு, கிழக்கு கடந்த 30 ஆண்டுகளாகப் போரால் பாதிக்கப்பட்டுத் தற்போது மீண்டெழுகின்ற பிரதேசம். இந்தப் பிரதேசத்தில் அந்த முகாம்களை அமைப்பது பொருத்தமானதல்ல. இந்த இடங்களைத் தெரிவு செய்ததன் நோக்கம் என்ன? வேறு இடங்களில் ஏன் இவற்றை அமைக்க முடியவில்லை என்ற கேள்வி எழுகிறது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்பதில் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றோம். கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதிலும் மிக உறுதியாக இருக்கின்றோம். ஆனால் அதற்கான முகம்களை அமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பகுதிகள் பொது மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக இருக்க வேண்டும். அவ்வாறான இடங்களில் முகாம்களை அமைக்க லாம். மக்கள் அதிகம் வாழ்கின்ற வடக்கு கிழக்கு மாகாணத்தில் இந்த முகாம்களை ஏன் அரசு நிறுவுகின்றது. இவ்வா றான செயலை நாங்கள் கண் டிக்கி ன்றோம். - என்றார். (சு-20)

## மின்தடை

யாழ்ப்பாணம்,மார்ச் 16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் குறிப்பிட்ட சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று சுன்னாகம் இலங்கை மின்சார சபையின் மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையத்தின் மின் பொறியிலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** உடுப்பிட்டி நூலகம், வல்லை, பொக்கணை, கெருடாவில், கெருடாவில் பாடசாலை, தொண்டைமானாறு, சந்நிதிகோவில், மயிலியதனை, வல்வெட்டித்துறை, சிதம்பராக்கல்லூரி, அக்கரை, வளலாய், வல்லிபுரம், உபயகதிர்காமம், வல்லிபுரம் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை ஆகிய இடங்களிலும், **வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த கிராமம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, லீலா ஆலை, பத்தினியார்மகிழங்குளம் கிராமம், தெற்கிலுப்பைக்குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்பட்டிருக்கும் என்று அவர் அறிவித்துள்ளார்.(க)

## அலங்கார உற்சவம்

சுன்னாகம்,மார்ச் 16

சுன்னாகம் வருஷப்புலம் பூந்தோட்ட ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை 108 சங்குகளால் அபிஷேகம் நடைபெறும். தினமும் மாலை 6.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி பூசை, வசந்தமண்டபப்பூசை, திருவீதியுலா நடைபெறும்.


எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (க)

## சிறப்புப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி, மார்ச் 16

சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்கும் வவுனியா 'சீட்' நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன கலந்து சிறப்பித்தார். மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமார், உளநல மருத்துவர் சி.சுதாகரன், மாவட்ட சமூகசேவை அலுவலர் செ.ஸ்ரீநிவாசன், விஷேட கல்வி ஆசிரிய ஆலோசகர் த.உதயராஜன், அதிபர் ரம்ஸீன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். பல்வேறு விஷேட தேவையுடையோருக்கான விளையாட்டுக்களுடன் உடற்பயிற்சிக் கண்காட்சியும் நடைபெற்றது. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் நடுவர்களாகக் கடமையாற்றினர். (கு-222)



## காலநிலை மாறலாம்

கொழும்பு, மார்ச் 16

வடமாகாணம்தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இன்று முதல் மழையுடனான வானிலை நீடிக்கும் சாத்தியமுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. மேல் மாகாணம், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

## உடுவிலில் 'கொரோனா' தடுப்பு

ஏழாலை, மார்ச் 16

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் கிராமமட்ட சுகாதாரக் குழுக்களுடன் இணைந்து பொதுமக்களுக்கு 'கொரோனா' வைரஸ் தாக்கம் குறித்தும் அதன் பரம்பலைத் தடுப்பதற்கான முன்பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தல் தொடர்பாகவும் விழிப்புணர்வு செய்யும் வேலைத் திட்டம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் அனைத்து கிராம அலுவலர் பிரிவு மட்டத்திலும் நடத்தப்படவுள்ளது என்று உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சின் நோய்த் தடுப்புப் பிரிவின் அறிவித்தல்களுக்கு அமைவாக இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவிருக்கிறது.

இலங்கையில் 'கொரோனா' வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப்பெற்று முற்றாக இந்தத் தாக்கம் தடுக்கப்படும் வரை இந்த விழிப்புணர்வு வேலைத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார். குறிப்பாக கைகளைக் கழுவுதல் தொடர்பாகவும், தனிநபர் சுகாதாரம் பேணுதல் தொடர்பாகவும் விழிப்பு ணர்வு செய்யப்படவிருக்கிறது.

இந்தவேலைத்திட்டத்தை முன்னெடுக்க கிராமிய மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியனவற்றின் ஒத்துழைப்புக்களையும் பெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-39)

## வரணியில் உணவகங்கள் முற்றுகை

சாவகச்சேரி, மார்ச் 16

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் மட்டுவில் மற்றும் வரணிப் பிரதேசங்களில், உள்ள உணவு கையாளும் நிலையங்களில் கடந்த வெள்ளிக்கிழமை திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

மட்டுவில் பகுதியில் உள்ளூராட்சி சபையின் உரிமம் பெறாத புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகம் மற்றும் ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையம் ஆகியவற்றினைக் கண்டுபிடித்து, 14 நாட்கள் கால அவகாசம் வழங்கியுள்ளனர். இக் காலப் பகுதிக்குள் விண்ணப்பம் செய்து உரிமம் பெறத்தவறின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவேண்டி வரும் என எச்சரிக்கை செய்துள்ளனர்.

வரணிப் பகுதியில் இயங்கும் 4 உணவு கையாளும்நிலையங்கள் 6 பலசரக்குக் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## வாழ்வாதார உதவி

வவுனியா செட்டிகுளம் ஒட்டறக்குளத்தில் தற்காலிகக் குடிசையில் வசிக்கும், இந்தியாவிலிருந்து இருந்து நாடு திரும்பிய குடும்ப த்தினருக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. நோர்வே வாழ் சமூக ஆர்வலர் கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த சண்முகம் ராஜ்மோகன், வீ 3 பவுண்டேசன் ஊடாக நாளாந்தம் உணவு தயாரித்து உணவகங்களுக்கு விநியோகம் செய்வதற்கான உதவிகளை வழங்கினார். செட்டிகுளம்பிரதேசசமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் உதவிகளை குடும்பத்தினருக்கு வழங்கினார்.(சு-222)

## குடும்பஸ்தர் காயம்

சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஹைஏஸ் ரக வாகனத்தினால் மோதுண்டு காயமடைந்தார். அவரை மோதிய வாகனம் அங்கிருந்து தப்பியோடியுள்ளது. காயமடைந்த மீசாலை மேற்கைச் சேர்ந்த இராசரத்தினம் யேசுதாசன் (வயது - 53) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு எழுதுமட்டுவாழ் ஏ-9 பிரதான வீதியில் இடம் பெற்றது. (ந-9)

# மணல் சேவைக்கு புதிதாக பதிவுகளை ஏற்க முடியாது

## பாரவூர்திச் சங்கம் அறிக்கை

**வடமராட்சி, மார்ச் 16**

**குடத்தனைப் பிரதேச வாகனங்களுக்குப் பதிவுகளை ஏற்றுக் கொள்வது சங்க விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல. அதனால் புதிய பதிவுகளை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.**

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாரவூர்திகள் மற்றும் கன்ரர் வாகனங்களுக்குப் பாரவூர்திச் சங்கம் அனுமதி வழங்க முடியாது என்று தெரிவித்ததை அடுத்து, பிரதேச மக்கள் பாரவூர்திகளை வழி மறித்து கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பாக சங்கத்தின் தலைவரால் விளக்க அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ் மாவட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்கான மணல் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, வடமராட்சி குடத்தனைப் பிரதேசத்தில் இருந்து பாரவூர்திச் சங்கத்தினராகிய எம்மால் திறம்படச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடத்தனைப் பிரதேச மக்கள் தங்களது வாகனங்களுக்கும் மணல் சேவை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், முதலில் 6 வாகனங்களுக்குரிய சேவையை வழங்குமாறு கேட்டதற்கிணங்கவும், மாவட்டச் செயலருடனான கலந்துரையாடலுக்கு அமைவாகவும் எம்மால் அவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டது.

தொடர்ந்து 9 வாகனங்களும், பின்னர் 13 வாகனங்களுக்குமாக, தற்போது தங்களால் கொள்வனவு செய்யப்படும் புதிய வாகனங்கள் அனைத்துக்கும் மணல் சேவை வழங்குமாறு மருதங்கேணிப் பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் எம்மிடம் கோரியுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் எமது சங்கத்தின் பதிவில் ஏறக்குறைய 500 வாகனங்கள் சேவையில் ஈடுபடுகின்றன. எமது அங்கத்தவர்களின் வாகனங்களுக்கு சுழற்சி முறை அடிப்படையிலேயே மணல் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு வாகனம் ஒரு சுழற்சியில் 10 தடவைகள் மாத்திரமே சேவையில் ஈடுபடும் நிலை காணப்படுகிறது. அந்த வாகனமானது மறுபடியும் சுழற்சி முறை மணல் சேவையில் ஈடுபடுவதற்கு குறைந்தது 6 மாதங்களேனும் காலதாமதமாகின்ற நிலை காணப்படுகிறது.

அத்துடன் குடத்தனைப் பிரதேச வாகனங்கள் ஒவ்வொரு மாதமும் 25 தடவைகள் சேவையில் ஈடுபடுகின்றமையால், எமது சங்கப்பதிவில் உள்ள அங்கத்தவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. அதனால் குடத்தனைப் பிரதேச வாகனங்களுக்கான பதிவுகளை ஏற்றுக் கொள்வது சங்க விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல. என்றுள்ளது. (க)



## சுவிஸ் சிறுமியின் நிதியில் மாணவர்களுக்கு உதவிகள்

கிளிநொச்சி, மார்ச் 16

சுவிட்சர்லாந்தில் வசித்து வரும் ஈழத்தமிழ் சிறுமி மற்றும் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த அவரது பள்ளித்தோழியும் இணைந்து வழங்கிய நிதியுதவியில், வன்னியில் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கான உதவிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டன. பிரவீனா மற்றும் டானா குகர் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் உதவிகள் வழங்கப்பட்டன. இருவருக்கும் வழங்கப்பட்ட ஒப்படை வேலைத்திட்டத்தை, மனிதாபிமான உதவித்திட்டத்துக்காக சிறுமிகள் வழங்கினர். சிறுமிகள் இணைந்து கேக் தயாரித்து விற்பனை செய்த நிதியை, உறவினர்கள் ஊடாக வழங்கினர். சுமார் 2 இலட்சத்து 21 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் மாணவர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டன. (க-20)

## மாணவர்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

வவுனியா, மார்ச் 16

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் கற்கும் மாணவர்களுக்குப் பயிற்சி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

சரஸ்வதி பவுண்டேசன் நிறுவன ஸ்தாபகர் லண்டன் வாழ் சமூக ஆர்வலர் கஜேந்திரன் பிரகலாதினி குடும்பத்தினர் இந்த உதவியை வழங்கினர்.

மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் பயிற்சி நூல்களை அதிபரிடம் கையளித்தார். (க-222)

## சடலம் மீட்பு

கிளிநொச்சியின் வட்டக்கச்சி கல்மடுக்குளப் பகுதியிலிருந்து குடும்பத் தலைவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலின்படி அங்கு சென்ற பொலிஸார் நேற்றுமுன்தினம் சடலத்தைமீட்டுகிளிநொச்சி மருத்துமனையில் ஒப்படைத்துள்ளனர்.

கல்மடுபகுதியைச்சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான பழனிவேல் தயாகரன் (வயது 46) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். அவர் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் காணாமல் போயிருந்தார்என்றும், இதுகுறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலதிகவிசாரணை முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார்தெரிவித்தனர். (சு-222)

## தேக்கு மரங்களை அறுத்து விற்பதைக் கட்டுப்படுத்துங்கள்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில், அமைந்துள்ள அரச மரக் கூட்டுத்தாபனத்தினர் அதிகளவான மரங்களை அறுத்து வெளியிடங்களுக்கு விற்பனை செய்வது தொடர்பில், புதுக்குடியிருப்புப்பிரதேசசபை அமர்வில்சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் இந்தச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துமாறு கோரி, ஜனாதிபதிக்கு சபையால் கடிதம் அனுப்பி வைப்பது என்றும் அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிரேம்காந் தெரிவித்ததாவது,

ஒட்டுசுட்டான் அம்பகாமம், மேழிவனம் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடுகளில் தேக்கு மரங்கள் அழிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மரக்கூட்டுத்தாபனம் மற்றும் வனவளத்திணைக்களம் என்பவற்றின் சட்ட விதிமுறைக்கு அமைவாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. இத்தகைய செயற்பாடுகளால் எமது மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. முறையான பருவ மழை வீழ்ச்சி கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகளுக்கு உரிய விளைச்சல் கிடைக்காமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. எனவே மரக்கடத்தல் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைப்பதென சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார். (க-246)

## யாழ்ப்பாணத்தில் முழுவீச்சில் கொரோனாத் தடுப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

நாட்டில் கொரோனா வைரஸின் தொற்று அதிகரித்துள்ள நிலையில், வைரஸ் தாக்கத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்டச் செயலகம் தொடர்புடைய அனைத்து திணைக்களங்களுக்கும் அவசர அவசரமாக அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. இந்த விடயத்தில் விரைந்து செயற்படும்படியும் திணைக்களத் தலைவர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ந-121)

## பலரைக் குதறிய நாய்க்கு விசர்நோய்

யாழ்ப்பாணம், மார்ச் 16



கொழும்புத்துறையில் அண்மையில் வீதியால் சென்றவர்கள் பலரைக் கடித்துக் குதறிய நாய்க்கு விசர்த் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாயால் கடியுண்ட பொது மக்கள் விசர் நோய்க்கான ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்தைஒழுங்காகப்போட்டுக்கொள்ள வேண்டும் என்று மாநகர சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர். நாயின் தலை மருத்துவ ஆராய்ச்சிக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மருத்துவ ஆராய்ச்சியின் போது சம்பந்தப்பட்ட நாய் விசர் நாய் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை கொழும்புத்துறைப் பிரதேசத்தில் உள்ள சகல வளர்ப்பு நாய்களுக்கும் விசேடமாக விசர் நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

ஏற்கனவே இந்தப் பிரதேசத்தில் பொதுமக்களைக் கடித்துக் குதறிய விசர் நாய் ஏனைய நாய்களுக்கும் கடித்திருக்கலாம். ஆகவே சகல வளர்ப்பு நாய்களுக்கும் தவறாது ஏ.ஆர்வி தடுப்பூசி மருந்தைப் போட்டுக் கொள்ளுமாறு மாநகர சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர். (க-17)

*ரவிகரனின் ஏற்பாட்டில்*

## 77 பயனாளிகளுக்கு உதவிப் பொருள்கள்

முல்லைத்தீவு, மார்ச் 16

'வாழ்வோம் வளம்பெறுவோம்' செயற்றிட்டத்தின் 33ஆம் கட்ட நிகழ்வு முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் நடைபெற்றது.

புலம்பெயர் அன்பர்கள் வடக்கு மாகாணசபை முன்னாள்உறுப்பினர்து.ரவிகரன்ஊடாகமுன்னெடுத்துவரும் இந்தச் செயற்றிட்டத்தில் தாயகத்தைச்சேர்ந்த, 77 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டு ஆயிரத்து 280கிலோ அரிசி மற்றும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா ஒவ்வொரு கிலோ பருப்பும் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வுக்கு புலம்பெயர்ந்து வாழும் உறவுகளான திருவினையர் குபேரன் சைலேந்திரி குடும்பத்தினர் மற்றும் அவர்களின் மகன் குபேரன் செளியன் ஆகியோரின் ஒரு லட்சத்து 21ஆயிரத்து 560 ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டன என்று ரவிகரன் தெரிவித்தார்.

நிகழ்வில் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ப.தெய்வேந்திரம் ஆகியோர் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-222)



# இன, மத, ஒற்றுமையை சிதைப்போரை எதிர்க்கவும்

## முல்லை. சர்வமதக் குழு வலியுறுத்து

*முல்லைத்தீவு, மார்ச் 16*

*மதங்கள் போதிக்கும் அன்பு வழியைப் பின்பற்றி பொய் வதந்திகள் மூலமாக இன,மத, ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராக ஒவ்வொருவரும் செயற்படவேண்டும்". இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட சர்வமதக்குழுவின் தலைவர் க.திருக்குமரன் தெரிவித்துள்ளார்.*



முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட சர்வமதத் தலைவர்களின் சந்திப்பு மற்றும் ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் மதத்திலும் விசுவாசம் இருக்கவேண்டும். சமயங்கள் அனைத்தும் அன்பு, அறம், நேர்மை, நீதி, அநீதிக்கான எதிர்ப்பைத் தெரிவித்தல் போன்ற விடயங்களைப் போதிக்கின்றன. மற்ற உயிரினத்தை அல்லது மற்றவர்களை எந்த வகையிலும் துன்பப்படு த்தாமல் இருக்கவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சர்வமதக்குழுவின் திட்டம் இந்த மாதத்துடன் முடிவுறுகின்றது.

மத நல்லிணக்கத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். இடையில் உள்ள சிலர் இன, மத வாதங்களைத் தூண்டுவதன் மூலம் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள். அது வெறும் சுயலாப நோக்கமாகவே இருக்கும். இவற்றை எல்லாம் விடுத்து மதங்கள் போதிக்கின்ற அன்பு வழியைப் பின்பற்றி இன, மத, நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராக ஒவ்வொருவரும் செயற்படவேண்டும். இதற்குச் சர்வமதக் குழு என்றும் துணையாக இருக்கும். என்றார். நிகழ்வில், கொக்குளாய் ஸ்ரீசமபோதி விகாரையின் விகாராதிபதி ஸ்ரீதிஸ்ஸபுர குணரத்தினதேரர், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பிரதமகுருக்கள் ஸ்ரீகந்ததாச குருக்கள், சிலாவத்தை பங்கின் பங்குத்தந்தை அலைக்ஸ் அடிகளார், நீராவிப்பிட்டி ஜும்மா பள்ளிவாசல் மௌலவி எம்.எச். முஜீப், முல்லைத்தீவு ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சம்சுதின் முகமது சுகிர், முல்லைத்தீவு மாவட்ட சர்வமதக் குழுவின் தலைவர் க.திருக்குமார், மாவட்ட கலாசார அலுவலர் இ.மதியரசி மற்றும் மத, இன நல்லிணக்க செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர். சிறப்பித்துள்ளார்கள். (த-19)

## ரணிலும் சஜித்தும் ஒன்றுபடவேண்டும்

*ரிஷாத் வலியுறுத்துகின்றார்*

வவுனியா, மார்ச் 16

நாட்டுக்கு நல்லாட்சியை வழங்க ரணிலும் சஜித்தும் ஒன்றுபடவேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐக்கிய மக்கள் சக்தி 'என்ற கூட்டமைப்பை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் கூடி முடிவெடுத்ததன் பிரகாரம் அனைத்து இனத்தவரையும் பிரதிபலிக்கின்ற பல கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஐக்கிய மக்கள் முன்னணி என்ற பெரும் சக்தியாக தேர்தலில் போட்டியிடவுள்ளோம். இன, மத பிரிவினை அற்று அனைவரும் ஒற்றுமையாக வாழும் சூழலை ஏற்படுத்துவதே எதிர்பார்ப்பு. அந்தவகையில் ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டு நிற்பதென்பது அவர்களின் கட்சி ஆதரவாளர்களுக்கு அவர்கள் செய்யும் அநியாயம். எனவே இருசாராரும் ஒன்றுபட்டு ஐக்கிய தேசியக்கட்சியின் மத்தியகுழுவில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் சஜித்பிரேமதாசதலைமையிலான கூட்டமைப்பிலே கலந்துகொள்வதுதான் சாலச்சிறந்தது. அதனூடாகத்தான் அதிக ஆசனங்களைப் பெறமுடியும். அதனூடாகவே ஆட்சி அமைக்க முடியும். எனவே நல்ல சூழல் இருக்கின்றபோது அதனை விடுத்து பிரிந்துநின்று கேட்டு வாக்குகளைச் சிதறடிப்பது அவர்கள் தங்கள் ஆதரவாளர்களுக்கும் நாட்டுக்கும் செய்யும் அநியாயம்.- என்றார். (த-110)

*அரசியல் தலைவரைத் தேர்ந்தெடுக்க*

## மக்களுக்கு உதவுவதுதான் மதத் தலைவரின் கடமை

மன்னார், மார்ச் 16

"மதச் சார்பு அற்ற அரசியல் தலைவரைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு உதவுவதே மதத் தலைவர்களின் கடமை" என்று மன்னார் சர்வமதப்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். நாடு முழுவதும் வதந்திகள் மூலம் ஏற்படுகின்ற மத, இன ரீதியான வன்முறைகளைத் தடுக்கும் முகமாக தேசிய சமாதான பேரவை மற்றும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கம் ஏற்பாடு செய்திருந்த விஷேட கருத்தரங்கு மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தேசிய சமாதானப் பேரவையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அன்ரன் மெடோசன் பெரேரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சர்வமதப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் வேறு, மதம் வேறு என்ற நிலைப்பாட்டில் தேர்தலில் செயற்படவேண்டும். மதத்தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவது தவிர்க்கப்படவேண்டும். மத சார்பாக தேர்தலில் போட்டியிட்டு மத ஒற்றுமையைப் பிளவுபடுத்தக் கூடாது.

அரசியல்வாதிகள் மதங்களைப் பயன்படுத்தி பரப்புரையில் ஈடுபடக்கூடாது. மத ரீதியாக நாம் பிளவுபட்டு நம்முடைய தியாகங்கள் போராட்டங்களைக் கொச்சைப்படுத்திவிடக்கூடாது. நாம் ஒற்றுமையாக இல்லை என்பதை சர்வதேசத்துக்குக் காட்டவும் கூடாது. இந்தத் தேர்தலில் இன, மத ஒற்றுமைக்காகச் செயற்படவேண்டும் என்று தெரிவித்தனர்.

நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற மத ரீதியான வன்முறைகள், பிரச்சி னைகள் அவற்றால் ஏற்பட்ட விபரீதங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. நிகழ்வில் மும் மதங்களையும் சேர்ந்த மதத்தலைவர்கள், விஷேட தேவையுடையவர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்திருந்தனர். (த-213)

## தமிழர்களின் தேவையை தமிழர்களே கூறவேண்டும்

*ராஜபக் ஷவினர் அல்ல என்கிறார் சிறிதரன்*

கிளிநொச்சி, மார்ச் 16

தமிழர்களின்தேவைகளைதமிழர்களேகூறவேண்டுமே தவிர இலங்கையின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வோ பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவோ,சிங்கள அரசியல் தலைவர்களோ அல்ல." என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இயக்கச்சி விநாயகர்புரம் மக்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்கள் இந்த மண்ணின் பூர்விகக் குடிகள். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது தமிழர்கள் இந்த மண்ணிலே இறைமையுடனே வாழ்ந்தவர்கள். தனியான இராசதானிகளோடு வாழ்ந்தவர்கள். ஐரோப்பியர்களின் வருகையின் பின்னர் அவர்களால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தின் பின்னரே எமது இறைமையும், சுதந்திரமும் எங்கள் மண்ணும் பறிக்கப்பட்டன.

அதன் பின்னரே தந்தை செல்வா காலத்தில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமரனது. பின்னர் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் ஆயுத ரீதியில் அதியுச்ச நிலைக்கு போராட்டத்தைக் கொண்டு வந்தவர். அதன்பின்னர் எங்களின் விடுதலைப் போராட்டம் இராஜதந்திர ரீதியில் இடம்பெற்று வருகிறது. மீண்டும் இராணுவக் கெடுபிடிகள் ஆரம்பித்திருக்கின்றன.

எங்களுக்கு உரிமைகள் கிடைக்கப்பெற்றால் நாம் சுயமாகவே மேலெழும்புவோம். எமது மண்ணிலே இயங்கிய சிமெந்துத் தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை, உப்பளம் போன்றவை எம்மால் மேற்கொள்ளப்பட்டால் எமது பொருளாதார ரீதியிலான தேவைகளும், வேலை வாய்ப்பு தேவைகளும் பூர்த்தி செய்யப்படும். என்றார். (த-6)

# யானைகளின் தொல்லை விரைவில் ஆராய்வு

## ஆளுநர் அலுவலக கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கில் யானைகளால் பொதுமக்கள் வாராந்தம் பாதிக்கப்பட்டு உயிரிழப்புக்களையும், பயிரழிவு களையும் எதிர்கொண்டுள்ள நிலையில், மின்சார வேலி அமைக்க வேண்டிய இடங்கள் தொடர்பில் விரைவாக ஆராயவேண்டும் என்று அதிகாரிகள் தற்போதுதான் கருத்துரைக்கின்றனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இது பற்றிய கலந்துரையாடலில்தான் அதிகாரிகள் இவ்வாறு கருத்துரைத்துள்ளனர்.

பிரதேச செயலகங்களிலிருந்து விஷேட குழு அமைத்து நிலைமைகளை ஆய்வுசெய்வதற்கான துரிதநடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான சிக்கல்களைத் தீர்க்கும் வழிவகைகள் தொடர்பில் ஆராயும் சிறப்புக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யானைகளைப் பாதுகாப்பது தொடர்பிலும் யானைகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பிலும்விசேடநிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளின் ஆராய்ச்சி முன்மொழிவுகளுடன் கலந்துரையாடப்பட்டன.

துறைசார்ந்த நிபுணர்கள் பொறுப்புடைய திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

மிருகங்கள் மற்றும் இயற்கை வள பாதுகாப்புத் தொடர்பிலான அமைப்புக்களைச் சேர்ந்த பேராசிரியர் லக்டாஸ் பெர்னாண்டோ மற்றும் மருத்துவர் பிரிதிவிராஜ் பெர்னாண்டோ ஆகியோர் பயனுள்ள பலதகவல்களைப் பகிர்ந்திருந்தனர்.

யானைகள் அழிவடைவதையோ யானைகளால் மனித உயிர்கள் இழக்கப்படுவதையோ தடுக்கும் வகையில் பரஸ்பரம் முன்னெடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. 2018 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் 12 வீதமான யானைகள் அழிவடைந்துள்ளன. நூறுக்கும் மேற்பட்ட மனிதர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நெல் மற்றும் தெங்குப் பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பயிர்ச் செய்கைக்குரிய பருவகாலத்தின்போது அமைக்கப்படும் தடுப்புவேலிகள் அல்லது மின்சார வேலிகள் பயிர்ச் செய்கையின் பின்பு அகற்றப்படுகின்றபோது விளைச்சலுக்குப் புறம்பான இதர அனுகூலங்களை யானைகள் பெறவாய்ப்பு இருக்கின்றது.

அவை மக்களின் வாழ்விடங்களுக்குள் ஊடறுத்துச் சேதங்களை ஏற்படுத்தாது என்று இதன்போதுகருத்துக்கூறப்பட்டது.

நாடுமுழுவதும் இதுவரை 4ஆயிரத்து 300 கிலோமீ ற்றருக்கும் அதிகமான மின்சார வேலிகள் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பிரதேச செயலகங்களின் குழுக்கள் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும், அதனுடைய பலாபலன்களை பிரதிபலன்களை அனுபவரீதியாக அறிந்து கொண்டபின்னர் இதர பிரதே சங்களில் அமைக்கப்படவேண்டிய மாதிரிக் கிரா மங்களின் முன்மாதிரி மற்றும் திட்டவரைபுகளை வரைந்து அதற்கான நிதி ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)

கிருமி நீக்கல்

# செயல் திட்டத்துக்கு ஆதரவு வழங்கவும்

## ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

கொரோனா வைரஸ் ஒழிப்புதேசியவேலைத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வாகனங்கள் கிருமி நீக்கல் செயல் திட்டத்து க்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றுவடக்குமாகாண ஆளுநர் பி. எஸ்.எம் சார்ல்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொது மற்றும் தனியார் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் உரிமையாளர்களுக்கு இதனை உரியமுறையில் நடைமுறைப்படுத்துமாறும் சுகாதார திணைக்களம் மற்றும் இந்த நடவடிக்கைக்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்டவர்களும் இதனை உரிய முறையில் பொறுப்போடுசெயற்படுத்துமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள் ளது.

அத்துடன் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள், வருகை தருபவர்கள் தொடர்பிலும் கண்காணித்து உரிய நடைமுறைகளை பின்பற்று மாறும் ஆளுநர் பணிப்புரை விடுத்து ள்ளார், என்றுள்ளது. (ஒ.5)

# திருட்டுச் சந்தேகநபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலுப்பையடி சந்திப் பகுதியில் பகல் வேளையில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கொடிகாமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் பட்டப்பகலில் புகுந்து தங்க நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிளை திருடிச் சென்ற நபர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கொடிகாமம் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 42 வயது உடையவர் என்றும் அவர் கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் எனவும் தெரியவருகின்றது.

அவரிடமிருந்து ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபா பெறுமதியான திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் முன்னெடு க்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5.106.111)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உயிரியல் பாட விரிவுரையாளராகக் கடமையாற்றும் **திருமதி கண்ணகி தயாசீலன்** அவர்களின் அன்புத்தந்தையார்

**இ.வே. கனகசபாபதி**

**(ஓய்வுபெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் கமநலசேவைகள் திணைக்களம் - வவுனியா)**

அவர்களின் மறைவுக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி சமூகம்**

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 • 04 • 1939



மறைவு 28 • 03 • 2019

**அமரர் அன்னலட்சுமி பத்மநாதன்**

(திதி: அட்டமி)

குடும்பத்தின் ஒளி விளக்காய் மிளிர்ந்த எம் அம்மாவே!
அறிவூட்டி சீராட்டி வளர்த்து நாம் வாழ வழிகாட்டி எம்
வாழ்வை வளமாக்கிய அம்மம்மாவே!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஆண்டொன்று ஆகிய போதும்
எம்முடன் நீங்கள் இருப்பது போலவே உணர்கின்றோம்
உங்கள் நினைவுகளோடு நீங்கள் காட்டிய வழியே நாம்
தொடர்ந்து வாழ்ந்திடுவோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய
நல்லூர் முருகனை வேண்டி நிற்கின்றோம்.

103 1, கோயில் வீதி,
நல்லூர்.


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச பெண்கள் சிவில் சமூக வலையமைப்பினரால் புது முறிப்பு மாதிரிக்கிராம மக்களுக்கு கடந்த வியாழக்கிழமை பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஐ)

## மரண அறிவித்தல்கள்

### இராசையா சிவபாலசிங்கம்



இணுவில் தெற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவபாலசிங்கம் 14.03.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தட்சணா மூர்த்தி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ததீஸ்வரன், தரணீஸ்வரன், கஜானி, ரமேஸ், வதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபிகா, மலர்விழி, ஜீவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தையா, பரஞ்சோதி, லீலாவதி ஆகியோரின் அன்பு சகோதரரும், யாதவன், ஆதன்யா, கிருஸ்வினி, ஜெனித்தா, கோமிகா, கார்மிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தரணீஸ்வரன்
(லவன் - மகன்)

077 421 5800 (J/11690)(11,17)

### ஞானப்பிரகாசம் சிதம்பரநாதன் J.P

(உரிமையாளர்: நியூ பிரகாஸ் ஜுவலறி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)



தோற்றம் 20.09.1948 மறைவு 15.03.2020

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சிதம்பரநாதன் நேற்று (15.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற கனகராயன் தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் உருக்குமணியின் அன்புக்கணவரும் ரங்கதாஸ் (முகாமை அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் - வடமாகாணம்) ஜெயராம் (வங்கி உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி, சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கிரிஜாவின் (ஆசிரியர், மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பளை) மாமனாரும் பவினேஸ்இன் அன்புப் பேரனும் குணபாக்கியம், தேவராஜா, கதிர்காமநாதன், லிங்கேஸ்வரி, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலகிருஷ்ணன் பாமினி, ராதாகிருஷ்ணன், மாயா கிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வா வீதி, தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்
021 321 0783, 077 959 0696

## மரண அறிவித்தல்கள்



### இ.வே கனகசபாபதி

(ஓய்வுநிலை பதவி நிலை உத்தியோகத்தர் - வவுனியா)

விடத்தற்பளையை பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட இ.வே.கனகசபாபதி நேற்று (15.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்தையா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்) அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக்கணவரும் கர்ணன் (கண்ணன் -SPHI சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி), கண்ணகி (பவானி - விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி), காருண்யன் (கஜன்-கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் குணதர்சனா (ஜனா - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாவட்டச்செயலகம் - யாழ்ப்பாணம்), தயாசீலன் (கனடா), ஸ்ரீதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிகா (மாணவி - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி), இலக்கியா (மாணவி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), லக்ஷஜன் (கனடா), யசிகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"காவேரி", உசன்,
மிருசுவில்.

தகவல்:-குடும்பத்தினர்
க.கர்ணன் - மகன், த.கண்ணகி - மகள்



### சின்னத்தம்பி செல்வராசா

பாடசாலை வீதி, இராசவீதி, நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வராசா நேற்று (15.03.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பார்க்கியத்தின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரமூர்த்தி (இளைப்பாறிய பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர்), கந்தசாமி (இளைப்பாறிய பாடசாலை அதிபர்), ஆறுமுகதாசன் (கனடா), தவமணிதேவி (லண்டன்), செல்வராசா (லண்டன்), இராசேஸ்வரி (ஜேர்மனி), ஞானசவுந்தரி (நோர்வே) ஆகியோரின் அன்பு தந்தையும், கமலாதேவி, சிவமணிராணி, பாலசிங்கம் (லண்டன்), பாஸ்கரலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் வசீகரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், விஜிதா (விரிவுரையாளர் - கிழக்கு பல்கலைக்கழகம்), வனிதா (மாவட்ட நீதிமன்றம் - பருத்தித்துறை), ஜெயகாந்தன் (பொறியியலாளர் - கனடா), மேனகா (விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), சிவசங்கர் (கொக்குவில் இந்து கல்லூரி), குகதாசன், சிவதாசன், வாசுகி, மயூரதி (லண்டன்), நிலானி, நிசானி, நிரோசன் (லண்டன்), ஜெகதா (லண்டன்), சிறீகரன் (ஜேர்மனி), நிவேதன், வினுஷா (நோர்வே) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 384 7200, 077 609 3760

தகவல்:
குடும்பத்தினர்.

(es.682)(13.17)



# சுழிபுரம் ஸ்ரீ வீரபத்திரசுவாமி உடனுறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் வருடாந்த பெரும் பொங்கல் விழா

நாளை (17.03.2020) செவ்வாய்க்கிழமை விளக்கு வைத்தல் வைபவத்துடன் ஆரம்பமாகி முதலாம் பொங்கல் 24.03.2020 செவ்வாய்க்கிழமையும் இரண்டாம் பொங்கல் 31.03.2020 செவ்வாய்க்கிழமையும் நடைபெறும் என்பதனை அம்பிகையின் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்

குறிப்பு:- வியாபாரம் செய்யும் அன்பர்கள் 22.03.2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு உங்களுக்குரிய இடங்கள் ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர் -

(J/11681)(1.17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## திருமதி அமிர்தலக்சினி விமலதாஸ்

Business University of Costa Rica London பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் 04.03.2020 இல் நடைபெற்ற 5 ஆவது பட்டமளிப்பு விழாவில் (Ph.D கலாநிதி பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியரான திருமதி அமிர்தலக்சினி விமலதாஸ் அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் மேன்மேலும் பதவி உயர்வு பெற்று அரும்பணி ஆற்ற எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க. பெண்கள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

## வடமராட்சி...

இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் இரு பெண்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். மற்றையவர், வடமராட்சி கொற்றவத்தையை பிறப்பிடமாக கொண்ட 38 வயதுடைய தீபா சீவரத்தினம் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவில்லை.

கொலையை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படுபவர் 5 அடி 10 அங்குலம் உயரத்தை உடைய கறுப்பு நிறத்தவர் என்றும் அவர் வெளிர் நிறத்திலான காற்சட்டையும் கரிய நிறத்திலான மேலாங்கியையும் அணிந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)

## தீயில்...

என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் இரு நாள்களாக மது போதையில இருந்துள்ளார். அவரது மனைவி, உறவினர்களை பார்ப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றுள்ள நிலையில் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி நேற்று முன்தினம் இரவு தீ மூட்டியுள்ளார்.

காயங்களுக்கு உள்ளானவர் அயலவரின் உதவியுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஒ.5,20,26)

## அத்தி...

டலுவல்கள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அரச மற்றும் வங்கி விடுமுறை தினமாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்தும் நீடிக்க வேண்டிய தேவை எற்பட்டால் மாத்திரமே நீடிக்கப்பபடும் என்று அவர் குறிப்பிட்டார். இன்றைய தினம் தனியார் துறையின்ருக்கும் விடுமுறை வழங்குமாறு அரசு கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ.5)

**காணி விற்பனைக்கு**
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு
தொடர்புகளுக்கு:- 077 300 2075

**நாஹா மருத்துவ நிலையம்**
தீவிர கை, கால் விறைப்பு, எரிவு, எலும்பு பாதிப்பு, மாறாத புண்கள், பாரிசவாதம், மூட்டுவாதம், அல்சர், மூலவருத்தம் - குணப்படல்.
வங்கி முன்லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி, (ஜெகபதிவீடு) மானிப்பாய்.
தொடர்பு: 077 321 2740

**A/L பௌதிகவியல்**
பிரத்தியேக வகுப்புக்கள்
077 316 4504

# யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி)

## பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2020

- இடம் : கல்லூரி பிரதான மண்டபம்
- காலம் : 29.03.2020 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : பிற்பகல் 3.00 மணி
- தலைமை : க.ஜெயபாலசிங்கம் அவர்கள்

அனைத்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் புதிதாக இணைந்து கொள்ளவிரும்பும் பழைய மாணவர்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

க.ஜெயபாலசிங்கம்
தலைவர்
077 620 4703

பா. பாலவரதன்
செயலாளர்
077 553 0753

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




அமரர் திருமதி
**சுகேந்தினி அஜந்தன்**
(முன்பள்ளி ஆசிரியர் SOS சிறுவர் கிராமம்)

கடந்த 01.02.2020 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இந்த அறிவித்தலை நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

வாகீஸ்வரி வீதி, கோண்டாவில்
குடும்பத்தினர்
077 621 5328





சர்வதேச தரத்திலான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற **MBA** பட்டத்தினை யாழ்ப்பாணத்திலேயே முழுமையாக நிறைவு செய்ய முடியும்

- Smart Lecture Halls
- IT Laboratory
- Library Facilities

✔ பதவி உயர்வுக்கு முட்டுக்கட்டை தொழில்சார் கல்வித் தகைமையா.....?
✔ வர்த்தக ரீதியான தந்திரோபாயங்கள் உங்கள் வியாபாரத்தை உயர்த்திடும்.
✔ சர்வதேச அங்கீகாரம் உள்ள **MBA** உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்கும்.

BLC CAMPUS
For more information:
0777 17 4443 (Sapthika) 0777 07 4449 (Vithya)
TVEC Approved Centre
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

# பங்குனி மாத ராசிபலன்கள்...!



## அதிர்ஷ்டம் தேடி வரப்போவது எந்த ராசிக்குத் தெரியுமா?

இந்தப் பங்குனி மாதம் 12 ராசிக்காரர்களுக்கும் அதிர்ஷ்டம் எப்படி இருக்க போகுது என்பதைப் பற்றி பார்ப்போம்.

### மேடம்

சிந்தனையை விடச் செயலுக்கு முக்கியத்துவம் தரும் மேஷ ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் செவ்வாய் பகவான், உங்கள் ராசிக்கு 9ல் மாத முற்பகுதியில் சஞ்சரிப்பதால் மனதில் ஒரு தெளிவு பிறக்கும். இதுவரை இருந்த தடைகள், குழப்பங்கள் நீங்கி உற்சாகம் பெறுவீர்கள், மாத மத்தியில் செவ்வாய் பகவான் பத்தில் உச்சம் பெற்றுச் சஞ்சரிப்பதால் சிறு சிறு, உடல் பாதிப்பு இருந்தாலும் முன்னேற்றங்கள் உண்டு. உங்கள் திறமை வெளிப்படும் காலமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். மனைவி வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.
வியாபாரத்தில் கூட்டாளிகளாலும், புதிய ஒப்பந்தங்களாலும் ஆதாயம் உண்டு. சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு.
விடாமுயற்சியால் வெற்றி பெறுவீர்கள். புதிய சிந்தனைகள் உருவாகும். உயரதிகாரிகளால் பாராட்டப்படும் சூழல் உருவாகும். தொழிலில் உங்கள் கை ஓங்கும். உங்கள் புகழ், அந்தஸ்து உயரும்.

### ரிஷபம்

தனது பொறுமையால் பெருமை சேர்க்கும் ரிஷப ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சுக்கிர பகவான் உங்கள் ராசிக்கு 12 இல் சஞ்சரிப்பதால் எதிலும் விழிப்பு ணர்வு தேவை. தேவையற்ற செலவீனங்கள் வர வாய்ப்புள்ளதால் வீண் செலவுகள் மற்றும் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. யாரையும் முழுமையாக நம்பி செயலில் இறங்க வேண்டாம். விழிப்புணர்வுடன் செயல்படுங்கள். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு மரியாதை அதிகரிக்கும். சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. தாயின் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை உண்டாகும். உங்கள் வாழ்வில் சிறு, சிறு பிரச்சினைகள், தடைகள் ஏற்பட்டாலும் அனைத்தையும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும்.

### மிதுனம்

வாழ்வின் ஏற்ற, இறக்கங்களை அனுபவமாக எடுத்துச் செயலாற்றும் மிதுன ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் புதன் பகவான் உங்கள் ராசிக்கு 9ல் சஞ்சரிப்பதால் உங்களுக்கு தெய்வ அனுகூலம் உண்டாகும். சிறு, சிறு பிரச்சினைகளைச் சந்தித்தாலும், அவற்றைச் சமாளிக்கும் திறமை ஏற்படும். எதிர்பாராத மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்படும். எந்த காரியத்திலும் நன்மை, தீமைகளை நன்கு ஆராய்ந்து, சிந்தித்துச் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வு இருந்தாலும், எதிர்பார்த்த பணவரவு உண்டு. பேச்சில் கவனம் தேவை. சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. உங்கள் முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. தாய் மற்றும் உறவினர்கள் உங்கள் செயல்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும். எந்த விஷயத்திலும் பொறுமையுடனும், விழிப்புணர்வுடனும் செயல்படுவது நல்லது. வீண் பிரச்னைகளிலும், மற்றவர் விடயங்களிலும் அநாவசியமாகத் தலையிட வேண்டாம். சக ஊழியர்கள் மற்றும் உயரதிகாரிகளிடம் கவனமுடன் செயற்படுங்கள்.

### கடகம்

வாழ்வில் எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றைக் கடந்து முன்னேற்றப் பாதையில் செல்லும் கடக ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சந்திர பகவான் உங்கள் ராசிக்கு 5 ல் சஞ்சரிப்பது பூர்வ புண்ணிய பலன்களை அனுபவிக்கும் காலமாகும். எத்தனை பிரச்சினைகள் வந்தாலும், அதை எளிதாக கடக்கும் காலம். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. மாத முற்பகுதியில் எடுக்கும் முயற்சிகளில் சிறிய தடைகள் வந்து நீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை உண்டாகும். தேவையற்ற வீண் பிரச்சினைகளை தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். எதிர்பாராத அதிர்ஷ்டமும், தனவரவும் உண்டாகும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் சிறு, சிறு பிரரச்சினைகள் வந்தாலும் அனைத்தையும் சமாளிக்கும் திறமை இருக்கும்.



# காகத்துக்கு உணவு வைத்த பிறகு சாப்பிடுவது நல்லதா?

காக்கை என்பது இந்து மதத்தைப் பொறுத்த வரை முன்னோர்களின் வடிவம் என்றும், சனிக் கிரகத்தின் வாகனம் என்றும் இரு நிலைகளில் முக்கியமான பறவையாகக் கருதப்படுகிறது. தினமும் காக்கைக்குச் சாதம் வைத்த பிறகு தான் சாப்பிட வேண்டும் என தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. தற்போது கிராமங்களில் மட்டுமே ஒரளவு இந்தத் தர்மம் கடைப்பிடிக்கப்படுகிறது. பித்ரு லோகத்தில் இருக்கும் எமது முன்னோர் நாம் அனுதினமும் செய்யும் தர்ப்பணம், தானம், தர்மம் போன்றவைகளினால் மிகுந்த திருப்தியும் சந்தோஷமும் அடைகிறார்கள்.
அவர்கள் ஆசீர்வாதம் தினமும் நமக்குக் கிடைப்பதனால் நாமும் எமது சந்ததியும் இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். எனவே நீங்கள் செய்யும் காரியம் உங்களுக்கும், உங்கள் குடும்பத்துக்கும் முன்னோரின் பூரணமான ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தருவதுடன் நவக்கிரக தோஷங்களையும் நீக்கும்.

## நாளை 17.03.2020

செவ்வாய்க்கிழமை

**விகாரி - பங்குனி 4**

திதி: அட்டமி மு.ப. 08.53 வரை
நட்சத்திரம்– மூலம் பி.ப. 4.56 வரை

**ராகுகாலம்- 03.19- 04.49 வரை**
**சுப நேரம்- 10.49- 12.19 வரை**
**எமகண்டம்- 9.19 - 10.49 வரை**

## கொரோனா மையம்...

டம் இடம்பெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் பிரதான வீதியை மறித்து போராட்டம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டம், வடக்கு கிழக்கு தமிழர் பகுதிகளை குறிவைத்து அரசு தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும், அதிகமான இடங்கள் மக்கள் நடமாட்டம் அற்ற பகுதிகளாக காணப்படுகின்ற போதும் மன்னார் பகுதியில் கொரோன நோயால் பாதிக்கப்பட்டவர்களை அனுமதிக்க கூடாது எனவும், அவர்களை மக்கள் நடமாட்டம் இல்லாத பாதுகாப்பான பகுதிகளில்வைத்து தனிமைப்படுத்திமருத்துவம் வழங்குமாறும் போராட்டத்தின் போது கோரிக்கை விடுத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் தீவக பகுதிகளில் அதிகம் மக்கள் வாழ்வதாகவும் இங்குள்ள மக்களின் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவே ஒழுங்கான மருத்துவர்கள் இல்லாத நிலையில் இவ்வாறான பாதிப்புக்கு உள்ளானவர்களை அழைத்து வருவது எங்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் செயலாக உள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதை மீறி பாதிக்கப்பட்டவர்களை மன்னார் மாவட்டத்துக்குள் கொண்டு வரும் பட்சத்தில் தாங்கள் பேருந்துகளை மறித்து போராட்டத்தில் ஈடுப உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அங்கு வந்த பிராந்திய பொலிஸ் அதிகாரிகள் பொதுமக்களுடன் உரையாடி அவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாமல் தடுப்பதாகவும், மன்னாரில் கொரோனா மையம் அமைப்பது உறுதிப்படுத்தப்படாத செய்திகள் எனவும், பொலிஸார் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்துவதாக தெரிவித்ததை அடுத்து மக்கள் போராட்டத்தை கைவிட்டுச் சென்றனர். (ஓ.5.56)

## கட்டுப்பணம்...

முன்னர் அறிவித்தபடி மார்ச் மாதம் 17, 18 ஆகிய இரண்டு தினங்களில் அலுவலக நேரங்களிலும் மார்ச் 19 ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரையில் கட்டுப்பணத்தை செலுத்த முடியும். இதனுடன் வேட்பு மனுக்களையும் கையளிக்க முடியும் என்று தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 19 ஆம் திகதி வேட்பு மனு மற்றும் எதிர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் 1981 இலக்கம் 1 இன் கீழான நாடாளுமன்ற பொது தேர்தல் சட்டத்தின் 24 (1) சரத்தின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தல் வாக்களிப்பு குறித்த அறிவிப்பு வெளியிடப்படும்.

இன்று விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளமையால் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பம் நாளை நள்ளிரவு 12 மணி வரையில் ஏற்றுக்கொள்வதற்கு அனைத்து தெரிவு அத்தாட்சி அதிகாரிகளுக்கும் துணைத் தேர்தல் ஆணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஓ.5)

## குடும்பத்தினரை...

பணம் ஆகியவற்றைக் கொள்ளை யடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று நள்ளிரவு 1.30 மணியளவில் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் நடந்துள்ளது.

வீட்டின்புகைபோக்கியில்பொருத்தப்பட்டிருந்தகண்ணாடியை அகற்றி, அதனூடாக உள்நுழைந்த கொள்ளையர்கள், அங்கு கட்டிலில்படுத்திருந்தவர்களைத் தாக்கியதுடன்ஏழுபவுண்தங்கநகைகளையும்10ஆயிரம்ரூபாபணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

முகமூடியும், தலைக்கவசமும்அணிந்த நால்வர் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டனர் என்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மோப்ப நாய்களுடன் வீட்டில் தேடுதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## திட்டமிட்டவாறு...

கூட்டம் அதிகம் திரளும் என்பதால் பாதுகாப்பு முன்னேற்பாடுகளை செய்துள்ளோம். தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும்'என்றும் ஜனாதிபதி கோத்தாபய குறிப்பிட்டார்.

சார்க் தலைவர்களுடனான கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடும் சார்க் தலைவர்களின் முயற்சி உலகிற்கு முன்னுதாரணம் என்ற கருப்பொருளில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. செய்மதி காணொலி மாநாடு இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கருத்தாகும்.

பிராந்திய தலைவர்களின் கருத்துக்கள், அனுபவங்கள் மற்றும் அவர்கள் முகம் கொடுத்த சவால்கள் பற்றி தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததன் மூலம் கொரோனா தொற்றை வெற்றிகொள்வதற்கு இயலுமாகுமென ஜனாதிபதி கோத்தாபய குறிப்பிட்டார்.

பிராந்திய பொறிமுறையொன்றை உருவாக்கி வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தையும் மக்கள் வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். தனது அரசு முறையாக நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு முடியுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருப்பதாகவும் பொதுத்தேர்தல் திட்டமிட்ட வகையில் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சமூக கட்டுப்பாட்டின் ஊடாக வைரஸ் பரவுவதை தடுப்பதற்குமுன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அரச தலைவர்களுக்கு விளக்கிய ஜனாதிபதி, நாட்டுக்கு வருகை தரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் சுய நோய் தடுப்பு காப்பு செய்து கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

### மோடி

தற்போது முழு உலகும் பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக மாநாட்டை ஏற்பாடு செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார். பிராந்தியம் என்ற வகையில் ஒன்றிணைந்து செயற்படுவது மிகவும் முக்கியம் என்றும் இந்தியப் பிரதமர் குறிப்பிட்டார். பிராந்தியம் என்ற வகையில் கொரோனா தொற்றுக்கு முகம்கொடுப்பதற்கு நிதியம் ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய இந்தியப் பிரதமர் மோடி, அதனை ஆரம்பிப்பதற்கு 10 மில்லியன் டொலர்களை அன்பளிப்பு செய்வதாகவும் குறிப்பிட்டார். சார்க் உறுப்பு நாடுகளுக்கு வைரஸை ஒழிப்பதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதற்கு இந்தியா தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### ஆப்கான், மாலைதீவு

சார்க் நாடுகளுக்கு பொது அமைப்பாக பிரச்சினைகளை வெற்றிகொள்ள முடியுமென்று ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஸ்ரப் கனி தெரிவித்தார். பூகோள அமைவிடத்திற்கேற்ப தனது நாட்டுக்கு சாதகமான நிலைமை இருந்தபோதும் சுற்றுலா கைத்தொழில் வீழ்ச்சிய டைந்துள்ள காரணத்தால் தற்போது பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு தனது நாடு முகம்கொடுத்திருப்பதாக மாலைத்தீவு ஜனாதிபதி இப்றாஹிம் முஹமட் சொலிஹ் குறிப்பிட்டார்.

### பங்களாதேஷ், நேபாளம்

நோய்த் தொற்று நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு தனது நாடு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக குறிப்பிட்ட பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா, ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒளி தனது நாட்டிலுள்ள தொழிநுட்ப அறிவு மற்றும் வளங்களை கொரோனா வைரஸை ஒழிப்பதற்காக வழங்குவதற்கு தயாராக உள்ளதாக குறிப்பிட்டார்.

### பூட்டான்

எம்முன் உள்ள எதிரி எமது கண்களுக்கு தெரிவதில்லை என்பதுடன், அதற்கு தேச எல்லைகள் கிடையாது என்பதால் ஒன்றிணைந்து எதிரியை தோல்வியுறச் செய்வதற்கு செயற்பட வேண்டுமென்று பூட்டான் பிரதமர் லோடே செரிங் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு நாட்டை நோக்கி இந்த நோய்த் தொற்று தொடர்பில் விரல் நீட்ட முடியாது என்று பாகிஸ்தான் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தி அதனை வெற்றிகொள்வதற்கு அவ்வப் போது இவ்வாறு கருத்துக்களை பரிமாறிக்கொள்வதன் அவசியத்தை இந்திய பிரதமர் நரோந்திர மோடி கலந்துரையாடலின் இறுதியில் சுட்டிக்காட்டினார், என்றுள்ளது. (ஓ.5)

## அராலியில்....

யில் வீழ்ந்து பரிதாபகரமாக நேற்று இரவு உயிரிழந்துள்ளான்.

சூரியகுமார் கீர்த்தனன் (வயது-25) என்ற இளைஞனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகத்தில் பணியாற்றும் இளைஞன், நேற்று இரவு பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே குழியில் வீழ்ந்து விபத்திற்குள்ளானதில் உயிரிழந்துள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5.105)

## பிரிட்டனிலிரு...

நிறுத்தப்பட்டுள் ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ.5)

## ஓ/எல் பெறுபேறு...

பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2019ஆம்ஆண்டுக.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளி யிடப்படு மென்று வெளியான தகவல்கள் வதந்தி என பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் சனத் பீ பூஜித தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இம்முறை க.பொ.த. உயர்தரபரீட்சைகள்ஒத்திவைக்கப்படும் என்று வெளியாகும் தகவலும் உண்மைக்குப் புறம்பானது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்சனத்பீ பூஜித குறிப்பிட்டுள்ளார். (எ)

## இத்தாலியிருந்து...

பதற்ற நிலை ஏற்பட்டது.

இத்தாலியிலிருந்து வருகை தந்திருந்த குடும்பத்தினர் தமது உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில், அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்கு இரகசிய தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து, கொரோனா தொற்று இருக்கலாம் என்ற அச்சத்தில் அவர்கள் தங்கியிருந்த வீடு முற்றுகையிட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் கொரோனா தொற்று இத்தாலியில் தீவிரம் அடைய முன்னரே யாழ்ப்பாணத்துக்கு வந்தோம் என்று பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். அத்துடன் நோய்க்கான அறிகுறிகளும் அவர்களிடம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5.20,26)

## கோடீஸ்வரனால்...

உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா கணேசபுரத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலில் கோடீஸ்வரன் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடுவதற்கு ஆசனம் வழங்குமாறு கோரியுள்ளார். இதன் மூலமாக கோடீஸ்வரன் தொடர்ந்தும் எமது கட்சியில் இருக்க முடியாது. அதேவேளை தமிழ் அரசுக் கட்சியும் ஒரு பங்காளிக் கட்சி என்ற ரீதியில் கோடீஸ்வரனுக்கு ஆசனம் வழங்குவது ஜனநாயக மீறலாகும். தமிழ் அரசுக் கட்சி கோடீஸ்வரனுக்கு ஆசனம் வழங்குமாக இருந்தால் நாம் அதை எதிர்ப்போம் - என்றார்.

### கோடீஸ்வரன் கருத்து

இந்த விடயம் தொடர்பில் கோடீஸ்வரனிடம் கேட்டபோது, நான் பரம்பரை தமிழ் அரசுக் கட்சிக்காரன். தமிழ் அரசுக் கட்சியின் ஆயுள்கால உறுப்பினரும் கூட. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலேயே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளேன். எனக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்துக்கும் இதுவரையும் எந்த உறவுகளும் இல்லை. இனியும் கிடையாது. அண்மையில் என்னைத் தமது கூட்டத்துக்கு தலைமை தாங்குமாறு வற்புறுத்தியதன் காரணமாகவே தலைமை தாங்கினேன்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆசனப் பங்கீட்டில் ஏற்பட்ட சிக்கல் நிலைமை காரணமாகவே ரெலோ ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட நேர்ந்தது. ஒரு வேளை இந்த முறை ஆசனம் கிடைக்காமல் போனாலும் நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வேறு கட்சிக்குப் போகப்போவதில்லை. ஆசனம் கிடைத்தால் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர். கிடைக்காது போனால் அந்தக் கட்சியின் ஆதரவாளன் - என்றார். (ஓ.ந.5.110)

## பலாலி...

நிலையத்திலிருந்து நேற்று தொடக்கம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு விமான சேவைகள் இடம்பெறாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது தற்காலிகமாக விமான சேவைகள் நிறுத்தப் பட்டுள்ளன. (ஓ.5,22)

## இன்றைய நாள்

**மேடம்:** சிலரின் விமர்சனம் வருத்தம் தரலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பீர்கள். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் மாறுதல் செய்வீர்கள்.

**இடபம்:** சிலர் உங்களுக்கு தேவையான நேரத்தில் உதவுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவில் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** நண்பருக்குத் தேவையான உதவியை வழங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும். பெண்கள் பிள்ளைகள் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவர்.

**கடகம்:** அடுத்தவரின் சூழ்நிலை அறிந்து செயல்படுவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். சேமிப்புப் பணம் முக்கிய செலவுக்கு பயன்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**சிம்மம்:** பொறுப்புணர்வுடன் செயல்படுவது பல நன்மைகளை தரும். தொழில், வியாபார நடைமுறையில் சுமூகமான நிலை காணப்படும். அவசர தேவைக்கு கடன் பெற நேரிடலாம்.

**கன்னி:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். மனதில் உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க சில மாற்றத்தை செய்வீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**துலாம்:** நண்பர் கூறும் நல்ல கருத்தை ஏற்றுக்கொள்வீர்கள். குடும்பத்தினர் உங்கள் மீது அதிக அன்பு, பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு படிப்படியாக நிறைவேறும்.


**விருச்சிகம்:** குடும்பச் சிக்கலுக்கு முக்கியமான தீர்வு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். நீண்ட கால நண்பருக்கு தேவையான உதவியை செய்வீர்கள்.

**தனுசு:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். குடும்பத்தினர் சரியான நேரத்தில் உதவிகரமாக இருப்பர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவு சுமாரான அளவில் இருக்கும்.

**மகரம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை எட்டுவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** பிறர் கூறும் விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். முக்கிய செயல் ஒன்றில் அதிக கவனமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்:** சிலரின் அறிவுரை சங்கடத்தை உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். அக்கம், பக்கத்தினர்களின் பகை விலகும்.



கொரோனா வைரஸின் தாக்கம் இத்தாலியில் தீவிரமாகியுள்ளது. பொதுமக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை தீவிரமாகக் கொள்வனவுசெய்து வருகின்றனர். இதனால் அங்குள்ள வர்த்தக அங்காடிகள் வெறிச்சோடிப் போயுள்ளன. (ம)


# கொரோனா இறப்பு 6,000



பீஜிங், மார்ச் 16

உலக அளவில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

சீனாவின் வுகான் மாகாணத்தில் தோற்றம் பெற்ற கொரோனா வைரஸின் தாக்கம், தற்போது மிகத் தீவிரமாகியுள்ளது. சீனாவில் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தாலும் சீனாவுக்கு வெளியில் கொரோனா ருத்ர தாண்டவம் ஆடிவருகின்றது. குறிப்பாக இத்தாலி, ஈரான் மற்றும் தென்கொரியாவில் கொரோனாவின் ஆதிக்கம் மிகைப்பட்டுள்ளது. இத்தாலியில் மட்டும் சுமார் ஆயிரத்து 200 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து ஒட்டுமொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆயிரமாக அதிகரித்தது. சுமார் 2 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் சுமார் 70 ஆயிரம் பேர் நலம்பெற்றுள்ளனர். (ம)



## பள்ளிகளை மூடிய பாகிஸ்தான் அரசு!

இஸ்லாமபாத், மார்ச் 16

கொரோனா வைரஸ் பரவிவருவதால் ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லைகளையும், நாட்டில் உள்ள பள்ளிகளையும் மூட பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுகான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ், தற்போது சீனாவுக்கு வெளியில் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த நிலையிலேயே ஈரான், ஆப்கானிஸ்தான் எல்லைகளை மூடியுள்ளது பாகிஸ்தான். (ம)

# அம்பேத்கருக்கு லண்டனில் நினைவிடம்



இந்திய அரசியல் சாசனத்தின் சிற்பியான பாபாசாகேப் அம்பேத்கர், 1920-21ஆம் ஆண்டுகளில் லண்டனில் உயர்கல்வி பயின்றார். அப்போது, வடமேற்கு லண்டனின் காம்டென் நகரில் கிங் ஹென்றி சாலையில் உள்ள 10ஆம் எண் வீட்டில் வசித்து வந்தார். இந்த வீட்டை அதன் உரிமையாளர் கடந்த 2015ஆம் ஆண்டு விற்க முடிவு செய்தார். இதை அறிந்த மகாராஷ்டிர அரசு அந்த வீட்டை இந்திய மதிப்பில் சுமார் ரூ.30 கோடிக்கு வாங்கியது.

பின்னர் அந்த வீடு அம்பேத்கரின் நினைவகம் மற்றும் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது. அதில் அம்பேத்கர் பயன்படுத்திய பொருட்கள், புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் திட்ட அனுமதி பெறவில்லை எனக் கூறி, நினைவகத்தை மூட காம்டென் நகராட்சி நிர்வாகம் உத்தரவிட்டது. இதையடுத்து, லண்டனில் உள்ள இந்தியத் தூதரகம் அந்த நினைவகத்துக்கு முறைப்படி திட்ட அனுமதி கோரிப் பெற்றுக் கொண்டதை அடுத்து அம்பேத்கரின் இல்லம் நினைவகமானது. (ம)

# ரஷ்யாவின் புடினா புடினின் ரஷ்யாவா?

மொஸ்கொ, மார்ச் 16



ரஷ்ய நாட்டின் அதிபர் தேர்தலில் மேலும் இரண்டு தடவைகள் போட்டியிடும் வகையில் திருத்தப்பட்ட அரசமைப்புத் தீர்மானத்தில் நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டார் புடின்.

ரஷ்யாவில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் சாசன சட்டத்தின்படி தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் ஒருவர் அதிபர் தேர்தலில் போட்டியிட முடியாது. இதனால், 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் புடின் போட்டியிட முடியாத சூழல் இருந்து வந்தது. இந்த நிலையில், ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வலண்டினா அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கான சட்டத்தை மீண்டும் புதுப்பிக்கவேண்டும் என்ற மசோதாவை தாக்கல் செய்தார்.

இந்த மசோதாவின்படி பழைய நடைமுறைகள் அழிக்கப்பட்டு அதிபர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கான சட்டம் மீண்டும் முதலில் இருந்தே நடைமுறைக்குவரும் அதாவது, ஏற்கனவே தொடர்ச்சியாக இரண்டு முறை அதிபர் தேர்தலில் போட்டியிட்டவர்கள் மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிடலாம். சுருக்கமாக கூற வேண்டுமானால் தற்போது அதிபராக உள்ள புடின் அடுத்து வரும் 2024ஆம் ஆண்டு மற்றும் 2030ஆம் ஆண்டு ஆகிய இரண்டு தேர்தல்களிலும் எந்தவித தடையும் இன்றிப் போட்டியிடலாம். இந்த மசோதா பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் சமீபத்தில் நிறைவேறியது. இந்த புதிய சட்டத்தை ஆதரித்து புடின் நேற்றுமுன்தினம் கையொப்பமிட்டார். (ம)

## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணர் மாணிக்கவாசகர்

(சிரேஷ்ட சுகாதார பரிசோதகர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். சண்டிலிப்பாயை வதிவிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் மாணிக்கவாசகர் 12.03.2020 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சசிதரன், Dr. பகிரதன், சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம், தவமணி, கணேசர் மற்றும் ஆனந்த கிருஷ்ணர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாமினி, காலஞ்சென்ற ராஜயோகினி, ஈஸ்வரி, சுகுணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சர்வானந்தன், நாகேஸ்வரி, செல்வேஸ்வரி மற்றும் Dr. தர்மராஜசிங்கம், சிவ்சோதி, சிவபாக்கியம்(மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அர்ச்சுனா-நிலா, ஐங்கரன்- பிரியங்கா, Dr. சிவசக்தி, Dr. யாழினி, சிவசங்கரி, அருண்ராஜ், சிவஐங்கரன், கணேஸ், விநோத் - ஜசிக்கா, சாலினி - அன்ரூ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை கனடா நேரப்படி காலை 6.30 - 8.30 மணி வரை கனடா ஸ்காபுறோவில் உள்ள Highland Funeral Home இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

சசிதரன் - +141 68279636 , Dr.பகிரதன் - +447960962593
சிவாஜினி - +15857550618

## மரண அறிவித்தல்



பிறப்பு 26 . 01 . 1949

இறப்பு 15 . 03 . 2020

### திருமதி சின்னத்தம்பி பரமேஸ்வரி (இரத்தினம்)

சாயுடை, மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி பரமேஸ்வரி நேற்று (15.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான எல்லுப்போலை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், எல்லுப்போலை சின்னத்தம்பியின் (ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், சமாதான நீதவானும்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நிமலன் (வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் கமலன் (வடமாகாண சபை அலுவலகம், கைதடி), காலஞ்சென்ற துஷியந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயேஸ்வரி (ஆசிரியை, சென் சாள்ஸ் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்), சாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் இராசமணி, அனுஷாவதி, இரத்தினசிங்கம், நாகராசா, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பாலசுப்பிரமணியம், சந்திரவதனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கவிஷா, கதிர்விழி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாயுடை, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்:-
குடும்பத்தினர்.

கணவர் - 077 619 1665, கமலன் - 077 823 6603



மலர்வு 18 . 03 . 1927

உதிர்வு 14 . 03 . 2020

### திருமதி திரேசம்மா அருளானந்தம்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா அருளாணந்தம் 14.03.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் PWD ஓவசியர் ஜோ. அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், அருள் மகன் (ஹரே கிருஷ்ணா), மகிழ்வதி, யசோதா, அருள்ராஜ் (பிரான்ஸ்), அருள்நேசன் (பிரான்ஸ்), செல்வதி, ஜெயவதி, கலாவதி ஆகியோரின் அன்புத் தாயும், நந்தராணி (ஹரே கிருஸ்ணா) காலஞ்சென்ற வாசிங்டன், யோசவ் இராஜசேகரன், வீலிக்ஸ், சந்திரன் (ரியோ ஐஸ்கிறீம்), சுரேன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான லூர்த்து, சவிரிமுத்து (கனடா), கிரேஸ் மற்றும் டோமினிக் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.03.2020) காலை 8.00 மணியளவில் நீர்கொழும்பில் இருந்து சுருவிலுக்கு எடுத்துவரப்பட்டு மாலை 4.00 மணியளவில் சுருவில் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுருவில்
ஊர்காவற்துறை. 077 704 0378

தகவல்:
யோசவ் இராஜசேகரன்

# சுண்டுக்குழி சம்பியன்



கரணவாய், மார்ச் 16
யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டத்தில் 18 வயதுப் பிரிவில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது.

இறுதியாட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. 18 வயது பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும் இடைக்காடு மகா வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின.

18:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது சுண்டுக்குழி மகளிர் கல்லூரி. (108)

# கலைவாணி சாதித்தது

யாழ்ப்பாணம், மார்ச், 16
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடைபெறும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மணியந்தோட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதியது. இதில் கலைவாணி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச், 16
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தப்படும் மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இதன்படி மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

* * *

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சென்ஸ்ராார் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை சென்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன. மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். தோமஸ் ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

* * *

வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்த துணைவி சென்நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# யங்கம்பன்ஸ் கழகம் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் கழக அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

வல்வை தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியின் மகிந்தன் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)



# கிளி. இந்துக் கல்லூரி கிண்ணத்தை வென்றது

கொடிகாமம், மார்ச் 16
வத்தளை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத் துடுப்பாட்டச் சங்கமும் வடபகுதி லயன்ஸ் கழகங்களும் இணைந்து நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான 'தேடல்' மென்பந்து துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்தத் தொடர் நடத்தப்பட்டது. லயன்ஸ் கழகங்களின் ஊடாக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணியினர் இந்தத் தொடரில் கலந்து கொண்டனர். 6 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாகத் தொடர் நடத்தப்பட்டது.

இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக் கல்லூரி அணி 51 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து இந்துக் கல்லூரி அணி 3.2 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. (ம-159)

# கருணாகரன் வி.கழகம் முன்னேற்றம் கண்டது!

யாழ்ப்பாணம், மார்ச் 16
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகம் முன்னேற்றம் கண்டது.

வல்லை தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கருணாகரன் விளையாட்டுக் கழக் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம- 23)





# பெர்குசனுக்கு கொரோனாவா?

நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் பெர்குசனுக்கு கொரோனா சோதனை நடத்தப்படவுள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

நியூசிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான தொடர் கொரோனா அச்சம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரில் பங்கேற்ற வீரர்கள் சிலருக்கு கொரோனா அறிகுறி இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ரிச்சட்சனுக்கு கடுமையான இருமல் இருந்ததை அடுத்து அவருக்கு கொரோனா சோதனை நடத்தப்பட்டது. அதில் கொரோனா தொற்று ரிச்சட்சனுக்கு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் பெர்குசனுக்கு தற்போது கொரோனா சோதனை நடத்தப்படவுள்ளது. கடுமையான தொண்டை நோவால் அவதிப்பட்டதை அடுத்தே அவருக்கு இந்தச் சோதனை நடத்தப்படவுள்ளது. (ம)





# கொரோனாவிடம் அவதானம் அவசியம்!

## கோக்லி அறிவுரை

கொரோனாவை எதிர்த்துப் போராட அனைத்து மக்களும் அவதானத்துடனும், பாதுகாப்புடனும், மனதில் உறுதியுடனும் இருக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின்பற்றி கொரோனா வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராட அனைத்து மக்களும் மனதளவில் வலுவாக இருக்கவேண்டும்.

பாதுகாப்புடனும், விழிப்புணர்வுடனும் இருங்கள். வந்த பிறகு குணப்படுத்துவதை விட வரும்முன் காப்பதே சிறந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தயவு செய்து எல்லோரும் கவனமாக இருங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஐ.பி.எல்லுக்காக காத்திருப்போம்!

## சாருக்கான் தெரிவிப்பு

ஐ.பி.எல் தொடருக்காக காத்திருப்போம். உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கொரோனா வீரியம் குறைந்த பின்னர்தான் தொடரை நடத்துவது குறித்து பரிசீலிக்க முடியும் இவ்வாறு தெரிவித்துள்ளார் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளரான சாருக்கான்.


இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகளுக்கும் ஐ.பி.எல் அணிகளின் உரிமையாளர்களுக்கும் இடையிலான கூட்டம், நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து சாருக்கான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஏப்ரல் 15ஆம் திகதி தொடங்கினால் அது குறைக்கப்பட்ட போட்டிகள் கொண்ட தொடராகவே இருக்கும்.

எத்தனை போட்டிகள் என்பதை இப்போது கூறமுடியாது. ரசிகர்கள் இல்லாமல் போட்டிகளை நடத்துவது பற்றிக்கூட ஏப்ரல் 15ஆம் திகதிக்குப் பிறகே முடிவெடுக்கப்படும்.

இப்போதைக்கு என்று தொடங்கும் என்பது பற்றி கூறுவதற்கில்லை' என்றார். (ம)



# இருக்கையை அதிகரித்த சென்னை சுப்பர் கிங்ஸ்!

ஐ.பி.எல் தொடர் நடைபெறலாம், கைவிடப்படலாம் என்ற கருத்துப் பகிர்வுகள் ஒருபுறம் இருக்கையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தனது சொந்த மைதானமான சேப்பாக்கம் மைதானத்தில் இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

சேப்பாக்கத்தில் 2011ஆம் ஆண்டு மூன்று கலரிகள் புதிதாக அமைக்கப்பட்டன. இதனால் மைதானத்தில் ஒட்டுமொத்த இருக்கைகளின் எண்ணிக்கை 12 ஆயிரத்தால் அதிகரிக்கப்பட்டது. ஆனால் முறையான அனுமதி பெறப்படவில்லை என்று தெரிவித்து கலரிகளைத் திறப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையில் கடுமையான முயற்சிகளின் பின்னர் தற்போது அந்தக் கலரிகள் திறக்கப்பட்டுள்ளன. (ம)



# வர்ணனையாளர் குழுவில் இருந்து நீக்கப்பட்டார் சஞ்சய் மஞ்ரேக்கர்!

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வர்ணனையாளர் குழுவில் இருந்து சஞ்சய் மஞ்ரேக்கர் நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றவுடன் வர்ணனையாளர் பணிக்குத் திரும்பிய மஞ்ரேக்கர், தொடர்ந்து பிசிசிஐ அமைப்புடன் இணைந்து பணியாற்றி வந்த நிலையில் திடீரென நீக்கப்பட்டுள்ளார். இதற்கான காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

தர்மசலாவில் நடந்த இந்தியா தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் பிசிசிஐ வர்ணனையாளர் குழுவில் சுனில் கவாஸ்கர், முரளி கார்த்திக், எல் சிவராமகிருஷ்ணன் ஆகியோர் மட்டுமே இடம் பெற்றிருந்தார்கள். ஆனால், பிசிசிஐ வர்ணனையாளர் குழுவில் மஞ்சுரேக்கர் பெயர் இடம் பெறாதது ஏன் எனத் தெரியவில்லை.

ஐபிஎல் தொடர் நடைபெற்றால், அதிலும் மஞ்ரேக்கருக்கு வர்ணனையாளர் பொறுப்பு வழங்கப்படாது என்றே ஐபிஎல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து பிசிசிஐ அதிகாரி ஒருவர் கூறுகையில், 'தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பிசிசிஐ வர்ணனையாளர் குழுவில் மஞ்ரேக்கர் இடம்பெறவில்லை. அடுத்த தொடருக்கு இருப்பாரா எனத் தெரியாது. என்ன காரணத்தால் அவர் நீக்கப்பட்டார் என்பதும் தெரியாது' எனத் தெரிவித்தார்



இந்திய அணியின் முன்னாள் வீரரான மஞ்ரேக்கர், சமீபகாலங்களாக இந்திய அணியின் செயல்பாட்டையும், வீரர்கள் குறித்தும் எதிர்மறையான விமர்சனத்தை முன்வைத்துவந்தார். அதனால் அவர் நீக்கப்பட்டுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக உலகக்கோப்பைப் போட்டியின் போது ரவிந்திர ஜடேஜாவை நம்பிக்கை அற்ற வீரர் என்று மஞ்ரேக்கர் செய்த விமர்சனம் பெரும் சர்ச்சையானது. ஆனால், அதற்குப் பதிலடியாக அரைசதம் அடித்து ரவிந்திர ஜடேஜா பதிலடி கொடுத்ததால் அதற்கு மஞ்சுரேக்கர் மன்னிப்பு கோரினார்.

மேலும், நியூஸிலாந்து அணிக்கு எதிரான தொடரில் இந்திய அணி வீரர்களின் பேட்டிங்கை கடுமையாக விமர்சித்தார். இந்திய அணி வீரர்கள் பேட்டிங்கை தொழில்நுட்ப ரீதியாக தவறுகளை மஞ்ரேக்கர் வெளியிட்டு விமர்சித்ததும் பிசிசிஐக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதால் நீக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. (ம)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
COURIER Services
கரிகணன்
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036
077 0111 028 | 029
வடக்கின் அச்சகதாரர்

# கிண்ணத்தை கைப்பற்றியது கொற்றாவத்தை அ.மி.த.க



கரணவாய், மார்ச் 16
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை அணி சம்பியன்.

போட்டியின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை அணியும், வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியும் அணியும் மோதின.

பலத்த எதிர்பார்ப்புக்கள் மத்தியில் ஆரம்பமான இந்தப் போட்டியில் ஆட்டம் ஆரம்பமாகி 3ஆவது நிமிடத்தில் டிலக் ஷன் கொற்றாவத்தை அணிசார்பாக முதல் கோலைப் பதிவு செய்தார். தொடர்ந்து 15ஆவது நிமிடத்தில் அதே அணியைச் சேர்ந்த அனார்த்தனன் இரண்டாவது கோலைப்பதிவு செய்ய முதல் பாதி ஆட்டத்தில் 2:0 என்ற கணக்கில் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் மீண்டும் அனார்த்தனன் கோல் ஒன்றைப் பதிவு செய்ய இறுதியில் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை அணி 3:0 என்ற கணக்கில் வெற்றிறு பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதில் மூன்றாமி டத்தை உடுப்பிட்டி அ.மி. கல்லூரி பெற்றது. (108)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி செல்லத்துரை (J.P)

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் மலேரியா தடுப்பு இயக்கம்)

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை 13.03.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் (உப அதிபர் - தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை) அன்புக் கணவரும், மோகன்ராஜ், உஷாராணி, சோதிராஜ், யசோராணி, நிமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவந்தி, காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் ஜெயகலா, சிவராமேஸ்வரன், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், நிவேத்தா, தர்சன், அபிராமி, தரன், ரிஷி, கேசிகன், யசிகன், அரசன், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், செல்வநாயகி, மகேந்திரன் மற்றும் சுந்தரலிங்கம், செல்வநாயகம், (செல்வம்ஸ் பற்றி - உரிமையாளர்), செல்வராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.
(es.682) (13.17)

077 056 5512
077 922 6718
075 047 0097

தகவல்:
குடும்பத்தினர்.

# ரி20 உலகக்கிண்ணத்தில் டோனிக்கு வாய்ப்பில்லை



ஐ.பி.எல் தொடர்தான் டோனியின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்று பரவலாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், ரி20 உலகக்கிண்ணத் தொடரில் டோனி விளையாட முடியாத நிலை உருவாகியுள்ளது.

இந்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்ட ஐ.பி.எல் தொடர் கொரோனா அச்சம் காரணமாக ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் இந்தத் தொடர் மேலும் பிற்போடப்படலாம். அல்லது ஆட்டங்களின் எண்ணிக்கையைக் குறைத்து நடைபெறலாம். நடைபெறாமலும் போகலாம். இவ்வாறானஐ.பி.எல்தொடர்பிற்போடப்பட்டாலோ அல்லது ஆட்டங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டாலோ அல்லது தொடர் கைவிடப்பட்டாலோ அது டோனிக்குப் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும். அதாவது டோனி குறித்து உறுதியான முடிவு எடுக்க முடியாது என்று தெரிவித்து பன்ட் அல்லது ராகுல் ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்படலாம். (ம)

## கடைத்தொகுதி வாடகைக்கு

இருபாலைச்சந்தி பருத்தித்துறை வீதியில் முருகேசு களஞ்சியம் பெயர் கொண்ட பல்பொருள் வாணிபம் தளபாடங்கள் மற்றும் இருப்புக்களுடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு - 077 903 9066

## Chemistry Personal Classes

A/L 2022,2021,2020 batch
And 2020 Repeat Batch
Past Paper Questions
(1979 - 2019),
Theory and Model Papers
076 289 4942

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.